Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

C/604



Job! With High Salary

Follow

Cima_UK, BIT


(O/L,A/L not necessary)

SMS your name & course to 772 395 895 & Get School.

MCS 324,Palaly Road,Parameswara Junction www.mcsitcampus.org

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 | பங்குனி 02 | புதன்கிழமை | (16.03.2011) | பக்கங்கள் 12+IV | ஓசை – 167

## அணு உலைப் பயங்கரம்; குலை நடுங்கும் ஜப்பான்



(டோக்கியோ)

ஜப்பானில் உள்ள அணு உலைகள் தொடர்ந்தும் வெடித்து வருவதால் அங்கு உயிராபத்தை ஏற்படுத்தும் அளவிலான கதிர்வீச்சுக்கள் பரவ ஆரம்பித்துள்ளன. பாதிப்பின் அளவைக் குறைக்க ஜப்பானிய அரசு போராடிக் கொண்டிருக்கிறது.

நேற்று ஜப்பானின் புகுஷிமா டாய்ச்சி அணு உலையின் நான்காவது உலையில் ஏற்பட்ட பெரும தீயைத் தொடர்ந்து, அந்த அணு உலை வெடித்துச் சிதறியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் அணு உலை வெடிப்பு! இலங்கைக்கு பாதிப்பு உண்டா?

### தினசரி வான்பரப்பைக் கண்காணிக்க பணிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வான்பரப்பிலும் கதிர் வீச்சுக்கு காரணமான துகள்கள் காணப்படுகின்றனவா என்பது குறித்த தொடர்ச்சியான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஜப்பானில் ஏற்பட்ட அணுக் கதிர்வீச்சுக் கசிவினால் இலங்கைக்கு ஆபத்து இல்லை என இலங்கை அணுசக்தி முகவரகம் வலியுறுத்தியுள்ளது.

எனினும் இலங்கை வான் பரப்பில் கதிர்வீச்சு பொருட்கள் எதுவும் காணப்படுகிறதா? (12ஆம் பக்கம் பார்க்க)

# எமக்கு விடுதலை தாருங்கள்

# ஜனாதிபதியிடம் கோரிக்கை

## தமிழ் அரசியல் கைதிகள் உருக்கம்

(வவுனியா)

**வவுனியா சிறைச்சாலையில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலைக்கு ஏற்பாடு செய்து தரும்படி மிகவும் உருக்கமான கோரிக்கை ஒன்றை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் முன் வைத்துள்ளனர். இவ் உருக்கமான கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அவர்கள் அனைவரும் ஒப்பமிட்டு** (11ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்; தடுத்து நிறுத்த ஆறு அம்சக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகுகளில் தொழிலில் ஈடுபடுவதனால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் 2.00 மணிக்கு கொழும்பு நிப்போன் ஹோட்டலில் நடைபெற்றது.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் யாழ்.மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சமாசத் தலைவர் வி. தவரட்ணம் ஆறு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு இடையூறு வேண்டாம் குழப்பம் நிகழ்ந்தால் மீள் வாக்குப்பதிவு

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கலவரம் ஏற்படுத்தி சுதந்திரமும், நியாயமானதுமான தேர்தலை நடத்த இடமளிக்கப்படாத அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியற்றதாக் கப்படும் என இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார். அத்துடன், இவ்வாறு வாக்களிப்பு நிலையமொன்றில் அளிக்கப்படும் வாக்குகள் செல்லுபடியற்றது என ஆக்கப்பட்டால், அதனுடன் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத்தின் இறுதி முடிவுகள் வெளியிடப்படமாட்டாது எனவும் தயானந்த திசாநாயக்க (12ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கப்பூருக்கான புதிய தூதுவராக பேரியல் அஷ்ரப் நியமிக்கப் படலாம்?

### ராஜதந்திர சேவையில் மேலும் சில மாற்றங்கள்

முன்னாள் அமைச்சரும், தேசிய ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவியுமான பேரியல் அஷ்ரப் சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விவகாரம் தொடர்பாக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் பேரியல் அஷ்ரப்புடன் கலந்துரையாடியுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள் (11ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவுக்குப் புனித யாத்திரை; பயண ஒழுங்குவிதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 20.03.2011ஆம் திகதி கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா நடைபெறவுள்ளது. இந்த விழாவிற்கான ஏற்பாட்டினை கச்சதீவு பங்குத் தந்தை அருட்திரு ஏ.அமல்ராஜ் அவர்கள் மேற்கொண்டுள்ளார். மாவட்டச் செயலகம் மற்றும் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், வேலணை பிரதேச செயலக அதிகாரிகள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸ் பிரிவினர் இணைந்து இவ் விழா ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

இம்முறை இத்திருவிழாவில் பெருமளவு இந்திய, இலங்கை யாத்திரிகர்கள் பங்குபற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திருவிழாவில் பங்குபற்றுவதற்காக யாத்திரிகர்கள் எதிர்வரும் 18, 19, 20 ஆகிய திகதிகளில் (12ஆம் பக்கம் பார்க்க)

## விரிவுரையாளர்கள் வேலை நிறுத்தம்; பாரபட்சமற்ற சம்பள உயர்வுக் கோரிக்கை

### நாடு பூராகவும் நேற்று நடந்தது

(கொழும்பு)

சம்பள உயர்வு வழங்குமாறு வலியுறுத்தி நாடு பூராகவுமுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். 2010ஆம் ஆண்டில் தொழிற்சங்க நடவடிக்கையின்போது பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தொடர்பில் நியமிக்கப்பட்ட குழு பரிந்துரைத்தவாறு சம்பள அதிகரிப்பு வழங்க வேண்டுமென வலியுறுத்தி ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளதாக நாவலதிறந்த பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஏ.எஸ்.சந்திரபோஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், (11ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் தேவானந்தாவுக்கு இந்திய விஞ்ஞானி புகழாரம்

### கழிவுப் பொருளை ஆக்கப்பொருளாக்கும் திட்டத்துக்குப் பாராட்டு

(கொழும்பு)

வாழை மரத்தினை ஆக்கப்பொருளாக்கும் திட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டும் அக்கறைக்கு இந்திய விஞ்ஞானி பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிநடத்துதலுடனும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட உதவியுடன் இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் மேற்கொள்ளப்படும் வாழை மரமூடான நார்ப்பொருள் உற்பத்தி தொடர்பான விளக்கச் செய்தியாளர் மாநாடு நேற்றையதினம் இடம் பெற்றது. இச்செய்தியாளர் விளக்கவுரை மாநாட்டில் சிறப்புரையாற்றிய இந்திய விஞ்ஞான (11ஆம் பக்கம் பார்க்க)



தொழிலை வெறுமனே தொழிலாக அன்றி

# மக்களுக்கான சேவையாக கருதிச் செயற்பட வேண்டும்

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(பச்சிலைப்பள்ளி)

மக்களுக்கு சேவையினை வழங்குகின்ற தொழில்களை மேற்கொள்பவர்கள் வெறுமனே அவற்றைத் தொழிலாக அன்றி மக்களுக்கான சேவையாகக் கருதி மேற்கொள்ள வேண்டும். அதுதான் இன்றைய நிலையில் பாதிக்கப்பட்டு வந்துள்ள எமது மக்களுக்கு தேவையென ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று பச்சிலைப்பள்ளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற சுகாதார தொண்டர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார தொண்டர்களின் தேவை என்பது இன்றைய நிலையில் எமது பிரதேசங்களுக்கு அவசியமான தேவையாகும். எனவேதான் நீண்டகாலமாக தொண்டர்களாக பணியாற்றியவர்களை அரச சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நாம் நடவடிக்கைகளை மேற்கொண்டு நியமனங்களையும் நியாயமான முறையில் பெற்றுத் தந்துள்ளோம்.

மேலும் நியமனம் கிடைக்கப் பெறாதவர்களை நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் சேவையில் சேர்த்துக் கொள்வதற்கும் பின்னர் காலப்போக்கில் படிப்படியாக அவர்களையும் நிரந்தர நியமனத்திற்கு உள்வாங்குவதற்கு நாம் நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்வோம் எனவும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச வைத்திய அதிகாரி செல்வி மைதிலி தலைமையில் இடம்பெற்ற இச்சந்திப்பில் பிரதேச சுகாதாரப் பரிசோதகர் குணரட்ன மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் தொண்டர்கள் எனப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் - அரசடி வீதி அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ மகாலட்சுமி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கும்பாபிஷேக்த்தினையொட்டிய பூர்வாங்கக் கிரியைகள் நேற்றைய தினம் ஆலயத்தில் நடைபெற்றது.

இக்கும்பாபிஷேகக் கிரியைகளை வண்ணை வீரமாகாளி அம்பாள் ஆலய பிரதம குருவும், சக்தி கிரியா வியாசருமான சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்களும் நிறைவேற்றுவார்கள்.

அதனைத் தொடர்ந்து 'கும்பாபிஷேகத்தின் மகத்துவம்' எனும் விடயத்தில் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தனின் சிறப்புப் பேருரையும் இடம்பெறும். (60)

# வருடாந்த விளையாட்டு விழா

(ஊர்காவற்துறை)

அனலைதீவு தெற்கு அ.த.க. வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் செல்வி எஸ்.விக்னேஸ்வரி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த ஐ.நடராஜா பிரதம விருந்தினராகவும், தீவக வலய மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன், அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலய அதிபர் வீ.ஓங்காரலிங்கம், அனலைதீவு வடலூர் அ.த.க வித்தியாலய அதிபர் திருமதி கௌரி கேதீஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (14)

# சுங்க அதிகாரிகள் யாழ்ப்பாணம் வருகை

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவ காலத்தின்போது சுங்கத் திணைக்கள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று நாளை யாழ். வந்து சேரவுள்ளதாக யாழ். சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் நாளைமறுதினம் 18 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இத்திருவிழா நிகழ்வுகளில் கலந்துகொள்ளச் செல்லும் பக்தர்கள் யாழ். குருநகர், நெடுந்தீவு, மண்கும்பான், சாட்டி ஆகிய பகுதிகளிலிருந்து செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, மன்னார் மற்றும் தென்னிந்தியாவிலிருந்தும் பக்தர்கள் அங்கு வருவதற்கான அனுமதியையும் கடற்படையினர் வழங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

இவ்வாறான சூழலில் அப்பகுதிகளில் சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்பதால் சுங்கத் திணைக்களத்தினரது நடவடிக்கைகள் அங்கு முடுக்கிவிடப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது. (பா)

# வீதி ஒழுங்கு விதிகள் அமுல் மீறினால் சட்ட நடவடிக்கை

துவிச்சக்கர வண்டிகளும் சிக்குகின்றன

யாழ். நகரப் பகுதிகளில் துவிச்சக்கர வண்டிகளில் சமாந்தரமாகச் சென்ற சுமார் 20 பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் வீதி விபத்துகள் அதிகரித்துச் செல்வதனால் இதனைத் தடுக்க யாழ்ப்பாண வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையிலேயே இந்த 20 பேரும் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் நேற்று யாழ்ப்பாண நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வழக்கை விசாரித்த யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி அ.ஆனந்தராசா ஒவ்வொருவரும் 500 ரூபா வீதம் அபராதம் செலுத்தவேண்டும் எனத் தீர்ப்பளித்தார். (மி,52)

# கிராமங்கள் தோறும் முதியோர் குழுக்கள்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை பிரதேசத்தில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக முதியோர் குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் கடந்த வாரம் தம்பாட்டிப் பகுதியில் முதியோர் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், குழுக்கள் இல்லாத பிரதேசங்களுக்கு புதிய குழுக்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உயர்குழுக்கள் அமைக்கப்படாத கிராம அலுவலர் பிரிவுகளில் இக்குழுக்கள் விரைவில் அமைக்கப்படும் என ஊர்காவற்துறை சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்தார். (14)

## கோலப் போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 5 மாணவர்களுக்கான கோலப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையிலும், மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் நடைபெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (11)

## மகோற்சவப் பெருவிழா

(காரைநகர்)

காரைநகர் - மணற்காடு அருள்மிகு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரியம்பாளின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இம் மகோற்சவப் பெருவிழாக்களில் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும், அடுத்த மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 02 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (60)

## யாழ்ப்பாணம் மாநகர சபை

### ஆதனப் பெயர் மாற்றம் சம்பந்தமான அறிவித்தல்

வட்டாரம் 21 இல் ஆதன இலக்கங்கள் 390, 392, 396 புன்னாலை வீதியிலுள்ள ஆதனங்களை கே.செல்வகுமாரும் மனைவி சுஜாதா என்பவர் தனது பெயரில் பெயர்மாற்றம் செய்துதருமாறு விண்ணப்பித்துள்ளார்.

இவ்வாதனங்கள் எமது பதிவேடுகளின்படி ஜனாப் சுல்த்தான் மொகிடீன் மொகமட் றபீக்கின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரங்கள்:**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட வண்ணார்பண்ணை கோவில்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 'பரந்தன்புளியடி' நிலப்பரப்பு 02 குழி 13.67. இது நில அளவையாளர் கே.பஞ்சாட்சரத்தினால் 2003.10.09 ஆம் திகதி 3090 இலக்கப் படத்தில் இரு கடைக் கட்டிடமும் வீடும் கிணறும் ஆகும்.

இப்பெயர்மாற்றம் சம்பந்தமாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்க விரும்புவோர் இவ்வறிவித்தல் பிரசுரமான தினத்திலிருந்து ஒரு மாத காலத்திற்குள் தகுந்த ஆவணங்களுடன் 'முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு ஆட்சேபனைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆட்சேபனைகள் ஏதும் கிடைக்கப்பெறாது விட்டால் விண்ணப்பதாரரின் விண்ணப்பத்திற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

**திருமதி யோ.பற்குணராஜா**

14.03.2011 (சி/615) **முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### விவசாய பீடம் விரிவுரைகள் ஆரம்பம்

கீழ்வரும் கல்வியாண்டு யாழ். பல்கலைக்கழக விவசாய பீட மாணவர்களுக்கான விரிவுரைகள் யாவும் எதிர்வரும் **21.03.2011 திங்கட்கிழமை** அன்று ஆரம்பமாகும் என்பதனை அறியத்தருகின்றோம்.

- முதலாம் வருடம் இரண்டாம் அரையாண்டு - 2009/2010
- இரண்டாம் வருடம் முதலாம் அரையாண்டு - 2009/2010
- மூன்றாம் வருடம் முதலாம் அரையாண்டு - 2009/2010
- நான்காம் வருடம் முதலாம் அரையாண்டு - 2009/2010

16.03.2011 (சி/510) **பதிவாளர்.**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் இதழியல் டிப்ளோமா மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் பகுதிநேர (2008/2010) டிப்ளோமா பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்த இரண்டாவது அணி மாணவர்களிற்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. மாணவர்கள் 30.03.2011 க்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

15.03.2011 (சி/511) **பதிவாளர்.**

இதயம் என்பது அறிவைவிட உயர்ந்தது. மூளையில் அறிவைச் சேர்ப்பதை விட இதயத்தைப் பயன்படுத்தி வளர்ப்பதிலேயே கவனம் செலுத்துங்கள்.

- காந்தியடிகள் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஒழுக்கம் பேணல் அவசியம்

மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களை மதித்து நடக்கவேண்டும் என்று எமது முன்னோர்கள் கூறிவந்துள்ளதுடன், அவர்களும் அவர்களுக்குரிய மதிப்பை அளித்து வந்துள்ளார்கள்.

ஆனால் அந்நிலையில் இன்று மாற்றம் ஏற்பட்டு வருவதை பெரியவர்கள் அவதானித்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. ஆலயங்களுக்கு ஒப்பான பாடசாலைகளிலும் அடிபிடிசண்டை, அரங்கேறிவரும் சம்பவங்களாகும்.

ஆசிரியர்களைக் குருவாகவும், தெய்வமாகவும் மாணவர்கள் மதித்து நடந்துவந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக்காலம் இப்போது மலையேறிவிட்டது.

அன்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையிலான தொடர்பு பய பக்தியுடன் கூடியதாக இருந்தது. ஆனால் இன்று அந்நிலைமாறி ஆசிரியர்களும், மாணவர்களும் தோழமை உணர்வுடன் பழகிவருகிறார்கள். இந்தப்பழக்கம்தான் மாணவர்களின் இன்றைய விபரீதமான செயற்பாடுகளுக்குக காரணமாக அமைந்து விடுகிறது. இம்மாற்றத்திற்கு யாரை நோவது.

குருபக்தியையும், பண்பாட்டு ஒழுக்க விழுமியங்களையும் ஆசிரியர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய மாணவ சமூகம் அந்த ஆசிரியர்களையே தாக்குகிறார்கள் என்றால்...?

மாணவர்களின் நல்லொழுக்கத்திலும், அவர்களது கல்விச்செயற்பாடுகளிலும் குறைகளைக்காணும் போதே ஆசிரியர்கள் அவர்களைத்தண்டிக்கிறார்கள். ஆனால் அதற்காக ஆசிரியர்களை மாணவர்கள் தண்டிக்க முற்படுவதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது.

மாணவர்களால் ஆசிரியர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் குறைவாகவே காணப்பட்டாலும், அதனால் பாதிக்கப்படும் ஆசிரியரின் கௌரவம் மட்டுமன்றி, அப்பாடசாலையின் கல்வியும் பாதிக்கப்படும்.

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலையில் இடம்பெற்ற இத்தகைய சம்பவம் ஒன்றினால் கல்விச் சமூகம் வெட்கித்தலைகுனியவேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டு விட்டது.

உயர்வகுப்பு மாணவர்குழுவினால் ஆசிரியை ஒருவர் தாக்கப்பட்டமை அவர்களால் ஆசிரிய சமூகத்திற்கு விடுக்கப்பட்ட ஒரு சவாலாகவே கருத வேண்டியுள்ளது.

இந்நிலை தொடர்ந்தும் நீடிப்பதற்கு எவரும்இடமளிக்காதவகையில், இத்தகைய நிலை ஏற்படுவதற்குரிய காரணங்களை ஆராய்ந்து, அறிந்து யார் தவறுவிட்டிருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும்.

இந்நிலையில் ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர், ''ஆசிரியர்களை நம்பி தம்பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் பெற்றோர்களது எண்ணத்தில் மண்ணைத்தூவும் வகையில் ஆசிரியர்கள் நடந்து கொள்ளக்கூடாது'' என்று கூறிய கருத்தும்,

ஒரு சில மாணவர்களின் செயற்பாடுகள் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் தலைகுனியவைக்கின்றன என்றும், ஒழுக்கக்கேடான சம்பவங்கள் பாடசாலையில் தொடருமானால் அப்பாடசாலையின் தரம் குறைக்கப்படும் என்றும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கது.

பாடசாலைகளில் நிலவும் ஒழுக்கச் சீர்கேடுகளுக்கு எவர்மீதும் தனித்துக்குற்றம் காணமுடியாது.


மாணவர்களது கல்வி செயற்பாடுகளிலாயினும் சரி, விளையாட்டுச்செயற்பாடுகளிலாயினும் சரி, பாடசாலை நேரங்களில் அதிபர், ஆசிரியர்களின் கண்டிப்பான கண்காணிப்பு அவசியமாகிறது. பாடசாலை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் பெற்றோர்களின் கண்காணிப்பு அவசியமாகிறது. ஒவ்வொரு பெற்றோரும் தம்பிள்ளைகளது ஒவ்வொரு அசைவுகளையும் கண்காணித்து வரவேண்டும்.

இத்தகைய கண்டிப்பும், கண்காணிப்பும் எல்லை மீறாத வகையில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் இரு தரப்பினரையும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

இன்றைய மாணவர் சமுதாயமே நாட்டின் எதிர்காலத்தலைவர்கள் என்ற பெருநோக்குடன் அவர்களை ஒழுக்க சீலர்களாகவும், சிறந்த தலைமைத்துவப்பண்புகளைக் கொண்டவர்களாகவும் உருவாக்கவேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை ஒருவரும் மறக்கக்கூடாது. -ஆசிரியர்-

# மாணவர்களை மீண்டும் இருண்டயுகத்திற்கு கொண்டு செல்ல சில அரசியல் கட்சிகள் முயற்சி

## அவதானமாக இருக்குமாறு ஜனாதிபதி எச்சரிக்கை



(கொழும்பு)

இந்த நாட்டில் 1988 ஆம் 1989 ஆம ஆண்டுகளில் நிலவிய இருண்ட யுகத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு சில அரசியல் கட்சிகள் முயற்சி செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ அம்பாந்தோட்டையில் தெரிவித்தார். அப்பாவிப் பாடசாலை மாணவ, மாணவியரை ஏமாற்றி அவா களைத் தவறான வழியில் இட்டுச் செலலுவதற்கு இந்த அரசியல் கட்சிகள் சூட்சுமமான முறையில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்:

"தமது பிள்ளைகளின் செயற்பாடுகள் குறித்து ஒவ்வொரு பெற்றோரும் மிகுந்த அவதானத்துடன் கவனிக்க வேண்டும். அவ்வாறான அரசியல் கட்சிகளின் சூழ்ச்சிகளில் சிக்கி குழந்தைகள் தவறான வழியில் சென்று விடாது அவர்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

சில அரசியல் கட்சிகள் சூட்சுமமான முறையில் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொண்டு அப்பாவி மாணவ, மாணவியரை ஏமாற்றித் தவறான வழியில் இட்டுச்செல்லும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரிகிறது. இச் சூழ்ச்சி குறித்து பொலிஸ் அறிக்கைகளும் எமக்குக் கிடைத்துள்ளன. இந்த முயற்சி எந்தெந்தப்பிரதேசப்பாட சாலைகளில் இடம்பெறுகின்றன. அவற்றுக்குப் பயன்படுத்தும் மாணவ, மாணவிகள் யார் என்பது போன்ற விபரங்களும் அந்த அறிகையில் உள்ளன.

இக் கட்சியினர் பதினான்கு, பதினைந்து வயது மாணவ, மாணவியருக்கு பிரத்தியேக வகுப்பு, கருத்தரங்குகளை நடத்துவதாகக் கூறி இச்சூழ்ச்சியை ஆசிரியர்களைக் கொண்டு முன்னெடுக்கின்றனர். இவர்கள் அரசியல் கோஷங்களை கரும்பலகைகளில் எழுதவும் துண்டுப் பிரசுரங்களை ஒட்டவும் இவ் வகுப்புக்களில் சொல்லிக் கொடுக்கின்றனர்.

பெற்றோர்களே! உங்களது அப்பாவிக் குழந்தைகளை அரசியல் கோஷங்களை கரும்பலகைகளில் எழுதிப் பழகவும், துண்டுப் பிரசுரங்களை ஒட்டும் முறைகளையும் அறிந்துகொள்ளவா பாடசாலைக்கும், தனியார் வகுப்புகளுக்கும் அனுப்புகிறீர்கள். அதனால் உங்களது குழந்தைகளின் நடவடிக்கை, செயற்பாடுகள் குறித்து சிறுபராயத்தில் கவனம் செலுத்தியது போல் இப்போதும் அவர்கள் மீது கவனம் செலுத்துங்கள்.

இவர்களது சூழ்ச்சியில் அன்று சிக்கிய மாணவர்கள் எத்தனையோ பேர் நிர்க்கதியான நிலையில் கண்ணீர் சிந்தியதை நாமறிவோம். அப்படியான இருண்ட யுகத்தை ஏற்படுத தவே இக்கட்சிகள் முயற்சி செய்கின்றன.

அரசியல் செய்வதென்றால் திறந்த மனதோடு அரசியல் செய்யுங்கள். இதை விடுத்து யாதுமறியாத அப்பாவிக் குழந்தைகளை அரசியலுக்குள் இழுத்து அவர்களது எதிர்காலத்தைச் சீரழிக்காதீர்கள். இலவசக்கல்வி சீரழிவதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று கூறினார்.

# இந்து மதம் தனித்துவமான பண்பாட்டைக் கொண்டது

## பேராசிரியர் சிவலிங்கராஜா

(யாழ்ப்பாணம்)

இந்துமதத்தைப் பொறுத்த மட்டில் அது இயற்கையோடு இணைந்த தனித்துவமான பண்பாட்டைக் கொண்ட மதமாகும். இன்று வெளியிடப்படும் இந்து நெறியூடாக உலகம் மாட்சி பெறும் என்று யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தெரிவித்தார்.

யாழ்பல்கலைக்கழக பொருளியற துறை மண்டபத்தில் நடைபெற்ற இந்து நெறிச் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் மதிப்பீட்டுரை நிகழ்த்திய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்து மன்றத் தலைவர் ஜெ. திருவரங்கன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்துநெறிபோன்ற சஞ்சிகை வெளிவருவதால் மக்கள் மத்தியில் மதிக்கத்தக்க கருத்துக்களை இலகுவாக உரிய முறையில் கொண்டு செல்ல முடிகிறது. இம் முயற்சி பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களையும் ஒன்றிணைக்க ஏதுவாகிறது என்று கூறினார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், பேராசிரியர் க.தேவராசா இந்து நாகரீகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரான பேராசிரியர்கள் நாச்சியார் செல்வதாயினம், கலை வாணி இராமநாதன், இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் மா.வேதநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நூலின் முதற்பிரதியை பேராசிரியர் நா.சண்முகலிங்கனிடம் இருந்து கல்விக்காருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பெற்றுக்கொண்டார். (62)

# மன்னாரில் 88,916 பேர் வாக்களிக்கத் தகுதி

நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மன்னார் மாவடடத்தில் 88,916 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக மன்னார் தேர்தல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேசசபைக்கு 24,658 பேரும் முசலி பிரதேசசபைக்கு 13,151 பேரும் மாந்தை மேற்கு பிரதேச சபைக்கு 18,707 பேரும் நானாட்டான் பிரதேசசபைக்கு 16,421 பேரும் மன்னார் நகரசபைக்கு 15,979 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட டுளளது.

இதேவேளை, மன்னார் நகர சபைக்கு 12 வாக்களிப்பு நிலையங்களும் மன்னார் பிரதேசசபைக்கு 20 வாக்களிப்பு நிலையங்களும் நானாட்டான் பிரதேசசபைக்கு 14 வாக்களிப்பு நிலையங்களும் முசலி பிரதேசசபைக்கு 8 வாக்களிப்பு நிலையங்களும் மாந்தை மேற்கில் 16 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப் படவுள்ளன.




யாழ்.ஹற்றன் நாஷனல் வங்கியின் பத்தும் விமன-2011 இற்கான சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற வெற்றியாளர் ஒருவருக்கு வங்கி முகாமையாளர் ரவிராஜ் பரிசு வழங்குவதைக் காணலாம்.

(படம்:- மிதுலன்)

# சமூகமாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் இசை ஆத்மீக பலத்தையும், நம்பிக்கையையும் தருகிறது

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்



(தும்பளை)

கலை வடிவங்களில் இசையே சமூக மாற்றத்தை உண்டாக்குவதுடன் அவையே சமூகத்தில் பெரும் செல்வாக்கைப் பெற்று விளங்குகின்றன என யாழ். பலகலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அல்வாய் கலையகத்தில் இடம்பெற்ற அவை இலக்கிய சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொர்டர்ந்தும் உரை நிகழ்த்துகையில்-

இசையானது கிராமிய இசை, பண்ணிசை, ஆக்க இசை எனப் பல பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டபோதும் அவ்விசை எல்லாவற்றையும் கடந்த முழுமையாகும்.

இசை மனிதனுடைய பிறப்புத் தொடக்கம் இறப்பு வரைக்கும் தொடர்புபடுகின்றது. வாழ்வியல் சடங்குகள், ஆலயங்கள, கலையாக்கங்கள், இலத்திரனியல் ஊடகம் என எங்கும் இசைப்பிணைப்பு வியாபித்துள்ளது.

கலை வடிவங்கள் சமூக மாற்றத்தில் பயன்படும் விதம் எவ்வாறு என நோக்கின் இசையானது சமூகமாற்றத்தை உண்டாக்குகின்ற போதும் சமூக மாற்றத்தில் இசை செல்வாக்குச் செலுத்துகின்றது.

எமது புலத்தில் இசைப் பாரம்பரியத்தில் சாஸ்திரிய இசை, பாரம்பரிய நாட்டுக் கூத்தினுள் மையம் கொண்டிருந்தது. ஆலயங்களை மையமாகக் கொண்டு தவில் இசை வளர்ச்சியுற்றது.

மேளம், சின்ன மேளம் உள்ளிட்ட கலை வடிவங்களின் பின்னால் சமூக அடுக்கமைவு இருந்தது. சாதாரண மக்களைப் பொறுத்தவரை இசையானது இந்தியாவில் சினிமாவினூடாகவும், இலங்கையில் வானொலியூடாகவும் சென்றடைந்தது. இயந்திரமயமான கலைப்பயில் வைத் தாண்டியவர்களே ஆக்க இசைக்குள் நுழைந்தனர். இசையானது நம்பிக்கையைத் தரும் ஊடகமாகவும், ஆத்மீக வல்லமையைத் தருவதாகவும், பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிப்பவையாகவும் விளங்குகின்றது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் யாழ்.பலகலைக்கழக சமூகவியற்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி மற்றும் இசைக் கலைஞர்கள், ஆர்வலர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (62)

# மெய்வல்லுநர் போட்டியும் கட்டடத் திறப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தின் இல்லமெய்வல்லுநர் போட்டியும் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழாவும் இன்று புதன்கிழமை பி.ப.12.30 மணிக்கு அதிபர் ந.சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.கந்தசாமி, பொறியியலாளர் கு.சிவபாலன், உலக உணவுத் திட்ட நிறுவனத்தின் யாழ்.மாவட்ட திட்டமிடல் அலுவலர் எஸ்.ஜெயரூபன், யுனிசெவ் நிறுவனப் பொறியியலாளர் எஸ்.தயாபரன், யாழ்.செஞ்சிலுவைச் சங்கப் பணிப்பாளர் இ.குகராஜன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பாடசாலை கட்டடத் தொகுதி உலக உணவு ஸ்தாபனம், யுனிசெவ், செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கட்டப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (104)

# வீதியை மக்கள் பாவனைக்கு அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுப்பு

(சண்டிலிப்பாய்)

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் வீதி தற்போது போக்குவரத்திற்குத் தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் ஆலய உற்சவ காலங்களின் போது இவ்வீதி போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டதால் அதிகளவான பக்தர்கள் அங்கு சென்று வழிபாடுகளை மேற்கொண்டனர்.

தற்போது ஆலய உற்சவம் முடிந்து சில தினங்களில் இவ்வீதியின் குறுக்காக மரங்கள் போடப்பட்டு நடுவில் மிதிவெடி அபாயம் எனும் சிறிய பதாகையும் வைக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.



இவ்வீதி மூடப்படுவதற்கு முன்னர் அப்பகுதியிலுள்ள காணிகளைத் துப்புரவு செய்பவர்கள் இவ் ஆலயத்திற்குச் சென்றே தண்ணீர் எடுத்துவந்ததுடன் அப்பகுதிகளிலுள்ள கடைகளில் உணவினையும் வாங்கினார்கள்.

ஆனால் தற்போது பாதை தடைசெய்யப்பட்டுள்ளதால் ஒரு கிலோமீற்றர் தூரமான பன்னாலைக்குச் சென்று உணவுப் பொருட்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதைவிட நகுலேஸ்வரா விததியாலயத்தின் சிரமதானப் பணிகளில் ஈடுபடுபவர்களும் பொருடகளைப் பெற்றுக் கொள்வதில் நீண்ட தூரம் செல்ல வேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே அப்பகுதி மக்களின் நலன்கருதி சம்பந்தப்பட்டவர்கள் அவ்வீதியை மீண்டும் பாவனைக்குத் திறந்துவிடுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (54)

# சாரணர் பயிற்சி

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்கத்தின் பருத்தித்துறை மாவட்டத்தினால் அறுவர் தலைவர் பயிற்சி மற்றும் பெண் சாரணர் அணித் தலைவர்களுக்கான பயிற்சி என்பன எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அறுவர்களுக்கான தலைவர் பயிற்சி காலை 8.30 மணிமுதல் 2 மணிவரையும், பெண் சாரணர் அணித்தலைவர் பயிற்சி காலை 8.30 மணிமுதல் 4.30 மணி வரையும் நடைபெறுமென மாவட்ட சாரணர் ஆணையாளர் அறிவித்துள்ளார். (109)

# அலங்கார உற்சவம்

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் மத்தி சோமன் தோட்டம் அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாலய கும்பாபிஷேக தினமாகிய எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை உற்சவம் நிறைவு பெறும். (54)

# கூட்டுறவுப் பயிற்சியைப் பெற்றவர்களை சங்கங்கள் இணைத்துக்கொள்ள வேண்டும்

(யாழ்ப்பாணம்)

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று இதய சுத்தியுடனும், நேர்மையுடனும், அர்ப்பணிப்புடனும் சேவை ஆற்றி வந்த கூட்டுறவாளர்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் அந்த இயக்கம் சிறப்பாக இயங்கி வந்தது என்று யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் ராஜாராமன் தலைமையில் நடைபெற்ற கூட்டுறவு உயர்தரப்பயிற்சி ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில்-

இப்போது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப்பயிற்சி நெறிகளில் 20 பயிற்சியாளர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கூட்டுறவுச் சபைகளில் கடமையாற்றுபவர்களைவிட க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்துள்ளவர்களுமே இணைக்கப்பட்டுள்ளனர்.


இவர்கள் பயிற்சி முடித்து வெளியேறும்போது அவர்களுக்கான வேலைவாய்ப்பை அவர்கள் சார்ந்திருக்கும் பிரதேசங்களில் உள்ள கூட்டுறவு நிலையங்களில் வேலைவாய்ப்பை வழங்க அந்நிறுவனங்களின் நிர்வாகிகள் முன்வர வேண்டும். ஆகக் குறைந்தது அவர்களை பயி லுநர்க்ளாக உள்வாங்கி பயிற்சியை வழங்கி பின் வேலை வாய்ப்பை வழங்கலாம் என்று கூறினார்.

இந்நிகழ்வில் இளைப்பாறிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேசமூர்த்தி உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியின் புனரமைப்புப் பணிகளை யாழ்.மாநரக சபை ஊழியர்கள் மேற்கொள்வதனையும், வீதிப் புனரமைப்புப் பணிகளை யாழ்.மாநகர சபை பிரதி மேயர் இளங்கோ (றீகன்) பார்வையிடுவதனையும் காணலாம். (படம்: மிதிலன்)

# மாவை முருகன் தந்த ஞான பண்டிதர் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் ஐயாவுக்கு அஞ்சலி செலுத்துவோம்



வரலாற்றுப் பெருமைமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் வரலாறு, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. சோழப் பேரரசி மாருதப் புரவீகவல்லியின் திருப்பணி பெற்றதிருத்தலம். சிதரம்பரதல தீட்சித பரம்பரையின் இறுதிச்சின்னம் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் ஐயா. வடமொழி, தென்மொழியில் பாண்டித்தியம் பெற்ற குருக்கள் ஐயா ஆங்கில மொழியை சரளமாகப் பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லமை படைத்தவர். சைவாகமங்களை ஐயந்திரிபற எழுத்தெண்ணிப் படித்தவர். கடந்த காலங்களில் நடைபெற்ற மிகவும் கொடூரமான யுத்தத்தின் மத்தியிலும் பல்வேறு இடர்பாடுகளையும், இன்னல்களையும் சந்தித்தபோதிலும், மாவை முருகன் திருக்கோயிலை நன்னிலைக்குக் கொண்டுவர ஓய்வு ஒழிவு இன்றி முயற்சி செய்தார். இதனால் வெற்றியும் கண்டார். எனவேதான் யாம் இன்று மாவை முருகனை ஓரளவில் தரிசிக்கப் பேறுபெற்று இருக்கின்றோம்.

நம் நாட்டில் உள்ள பல கோயில்களை சைவாகம நெறிமுறை வழுவாது நிர்வகிக்க வழிகாட்டியவர். கோயில் கிரியைகளிலும், மந்திர உச்சாடனத்திலும் தன்னிகரற்ற தனித்துவம் பெற்றவர். செந்தணமை பூண்டு ஒழுகும் அந்தணப் பெரியோனாகிய குருககள் ஐயா ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், சீதாராம சாஸ்திரிகள், சுப்பிரமணியக் குருக்கள், இவரது பாட்டனார் வழிநின்று அவ்வரிசையில் இடம்பெறுகின்றார்.

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையார் போன்றோரின் பெருமதிப்புக்குப் பாத்திரமானவர் குருக்கள். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் வரலாறு மாவைக் கந்தன் ஆலய வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது.

மாவைக் கந்தனுக்கு முப்போதும் திருமேனி தீண்டி பூசை செய்த அந்தணப் பெரியவர் இன்று நம்மிடையே இல்லை. ஆயினும் அவர்களின் ஆத்மா மாவை முருகனிடம் சென்றடைந்துவிட்டது. இடை நிரப்ப முடியாத மாவைக் குருக்கள் ஐயாவின் இழப்பு பேரிழப்பாகும். இந்நிகழ்வு சைவத் தமிழ் உலகுக்கு பெரும் இடைவெளியும் பேரிழப்பும் என்பதை நாம் சொல்லியே ஆக வேண்டும். குருக்கள் ஐயாவுக்கு நாம் செய்ய வேண்டிய நன்றிக் கடன், மாவைக் கந்தனின் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை அடியவர் தரிசிக்க வைப்பதேயாகும்.

# தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அமைச்சரின் கரங்களைப் பலப்படுத்தவேண்டும்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஐம்பது வருட காலமாக ஒற்றுமையுடன் மென்பந்து துடுப்பாட்டப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ள காந்தி விளையாட்டுக்கழகத்தையும் கலைமகள் விளையாட்டுக் கழகத்தையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது என்று யாழ். நகரசபை உறுப்பி னரும், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர்கள் சங்கத் தலைவருமான எஸ்.விஜயகாந் குறிப்பிட்டார்.

காந்தி விளையாட்டுக்கழகத் தலைவர் ஜோ.கஜானந்தன் தலைமையில் நடைபெற்ற மென பந்து துடுப்பாட்டப் போட்டியின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது -

இந்த இரண்டு விளையாட்டுக் கழகங்களும் ஐம்பது வருடங்களாக ஒற்றுமையாக இருந்து விளையாட்டுப் போட்டியை நடத்திவருவது போல் தமிழ் மக்கள் ஏன் ஒன்றுபட்டு நிற்க முடியாது.

இவர்களது ஒற்றுமையை நாம் முன்மாதிரியாகக் கொண்டு தமிழ் மக்களை ஒன்றுபட்ட சக்தியாக நாம் மாற்றவேண்டும்.

தமிழ் மக்கள் அவலங்களைச் சந்தித்தபோதெல்லாம் அவர்களின் அவலங்களைப் போக்குவதற்குத் தன்னாலான பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆற்றி வந்துள்ளார். இதனை எவரும் மறுதலிக்க முடியாது.

யாழ்.மாவட்டத்திலுள்ள விளையாட்டுக் கழகங்களாயினும் சரி, பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டிகளாயினும் சரி அவர்களுக்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து கொடுப்பதில் அமைச்சர் என்றும் தவறியதில்லை.

வடமாகாணத்தின் விளையாட்டுத் துறையை ஊக்குவிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்கிவரும் அவரது கரத்தைப் பலப்படுத்த வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களுக்கு உண்டு. மக்கள் இதனை நிச்சயம் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு எனத் தெரிவித்தார்.

இப் போட்டிகளில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக கணக்காய்வுப் பரீட்சகர் க.கோடீஸ்வரன், கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.ஞானகாந்தன் ஆகியோர் வெற்றி பெற்றோருக்கு வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவித்தனர்.

# மாட்டிறைச்சியைக் கொண்டுசென்றவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக 28 கிலோ மாட்டிறைச்சியை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற நபரை சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபரைப் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது, சம்பந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிவான் குறித்த நபருக்கு 2 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், சான்றுப் பொருளான மாட்டிறைச்சியை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், அபராதம் செலுத்தத்தவறின் ஒரு மாதம் சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டார். (LI)

# போக்குவரத்திற்கு இடையூறு; சாவகச்சேரியில் 8 பேருக்கு தண்டம்

(வடமராட்சி)

சாவகச்சேரிப் பகுதியில் போக்குவரத்துக்கு இடையூறாக துவிச்சக்கர வண்டியில் சென்ற 8 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா 500 ரூபா அபராதம் விதிக்கப்ப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதா வது -

குறித்த 8 பேரையும் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் பதில் நீதிபதி செ.கணபதிப்பிள்ளை இவர்களிடம் தலா 500 ரூபா அபராதமாகச் செலுத்துமாறு தீர்ப்பளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (11)

# சிற்றூர்தியை மறிக்காது ஏறிய நபர் சறுக்குண்டு வீழ்ந்து காயமடைந்தார்

(நெல்லியடி)

சிற்றூர்தியை மறிக்காது, ஓடிக்கொண்டிருந்தபோது ஏறிய பயணியொருவர் தவறி வீழ்ந்ததால் கையில் சிறிய காயததுடன் உயிர்தப்பியுள்ளார்.

நெல்லியடியில் மூத்தவிநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இந்த விபத்து ஏற்பட்டது. பயணி ஒருவரை இறக்கிவிட்டுச் சிற்றூர்தி மெதுவாகப் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது நண்பர்களுடன் கதைத்துக் கொண்டு நின்ற இளைஞன் ஒருவர் திடீரென ஓடிவந்து அதில் ஏற முயற்சித்தபோது சறுக்கி வீழ்ந்தார்.

இவர் கையில் தலைக் கவசம் வைத்திருந்தார் எனவும், இவர் விழுந்தபோது தலைக் கவசம் நொருங்கியதாகவும் கையில் சிறிய காயம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு விரைந்த நெல்லியடிப் பொலிஸார் விசாரணை நடத்தினர். சம்பந்தப்பட்ட பயணிதான் சிற்றூர்தியை மறிக்காது ஏற முயற்சித்தது தவறு எனப் பொலிஸாரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது. (மா)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவம் வெகுவிமரிசையாக நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்திபெற்ற புளியம் பொக்கணை நாகதம்பிரான் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த யுத்த காலச் சூழ்நிலைகள் காரணமாக இப்பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததன் காரணமாக கடந்த சில வருடங்களாகப் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா நடைபெறவில்லை.

தற்சமயம் அவ் ஆலயப் பகுதி அமைந்துள்ள பிரதேசத்தில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள நிலையில், இந்த ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழா விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

வன்னியில் வற்றாப்பளை கண்ணகை அம்மன், புதூர் நாகதம்பிரான் வரிசையில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் விழாவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

இப்பொங்கல் நிகழ்வுகளில் வன்னியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு வருகை தருவது வழமை.

அதேபோன்று இம்முறை நடைபெறவுள்ள புளியம் பொக்கணை நாகதம்பிரானின் வருடாந்த பொங்கல் விழாவிலும் பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (பா)

# பரந்தன் - முல்லைத்தீவு வீதி அகலமாக்கும் பணி ஆரம்பம்

(பரந்தன்)

பரந்தன் - முல்லைத்தீவு வீதி அகலமாக்கும் பணிகள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரினால் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. கிரவல் மண் கொண்டு செப்பனிடப்பட்ட இவ் வீதி, கடந்த மாரிகாலத்தின் போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இவ் வீதி குன்றும் குழியுமாகவும போக்குவரத்திற்குச் சிரமமாகவும் காணப்பட்டது.

இத்தகைய சூழ்நிலையில் குன்றும் குழியுமான பகுதிகள் சீர்செய்யப்பட்டு வீதியை அகலமாக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றது. இப் பணிகள் நிறைவு பெற்றதும் தார் வீதியாக மாற்றப்பட்டவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் பரந்தன் சந்தியிலிருந்து மூன்றாம் கட்டை முரசு மோட்டைப்பகுதியில் இவ் வீதியை அகலமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (பா)

## ஆதினியின்.இன்றைய பலன்

(16.03.2011 – புதன்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

விகிர்தி பங்குனி 02
இராகுகாலம் 12.20–1.50,
சுபநேரம் 4.50 –6.20,
ஏகாதசி மு.ப.9.04, பூசம் பி.ப 2.58, சித்தம்
ஏகாதசி விரதம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– அமைதியில் விருப்பம், பெரியோர் சந்திப்பு, காரியசித்தி.

**ரிஷபம்:**– தற்பெருமை, வீண்பேச்சு, கலகம்.

**மிதுனம் :**– காரியத்தடை, பொருள் இழப்பு, முரண்படல்.

**கடகம்:**– உதவி செய்தல், பணவரவு, கொண்டாட்டம்.

**சிம்மம்:**– பாராட்டப்படல், மேலாளர் உதவி, காரிய ஜெயம்.

**கன்னி :**– வேண்டாத சந்திப்பு, பொருள் இழப்பு, திருடர் பயம்.

**துலாம் :**– விரோதித்தல், அவமானம், பகை அதிகரிப்பு.

**விருச்சிகம்:**– கௌரவம் உயர்வு, பெரியோர் ஆசி, காரியச் சித்தி.

**தனுசு:**– போட்டிகளில் வெற்றி, செய்தியால் லாபம், உறவினர் உதவி.

**மகரம்:**– ஊக்கமிகுதி, ஆரோக்கியம், மகிழ்வான செய்தி.

**கும்பம் :**– கற்பனை மிகுதி, களியாட்ட விருப்பு, விருந்துணவு.

**மீனம்:**– நினைத்த காரியச் சித்தி, நண்பர் உதவி, பிரயாணத்தால் லாபம்.



யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர் செல்வநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற இந்துநெறி இதழ் வெளியீட்டு விழாவில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சண்முகலிங்கன் நூலினை வெளியிட 'கல்விக் காருண்யன்' நாகரத்தினம் பெற்றுக்கொள்வதனையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் காணலாம்.

# சாதகமாக அமையும் மைதானம்

(கண்டி)

கொழும்பு மைதானமும் எங்களுக்கு சாதகமாக இருக்கும் எனக் கருதுகிறோம். எனவே அவுஸ்ரேலியாவை நிச்சயம் வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம் என பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிம்பாப்வே அணியை எங்கள் பந்து வீச்சாளர்கள் உமர்குல், அப்துல்ரசாக் ஆகியோர் தொடக்கத்திலேயே கட்டுப்படுத்தி விட்டதால் எங்களுக்கு வெற்றி எளிதாக அமைந்தது. நான் 3 ஓட்டங்களில் வெளியேறியது ஏமாற்றத்தை கொடுத்தது. போட்டியை வேகமாக முடித்து விட வேண்டும் என்ற எண்ணத்தில் நான் ஆடினேன்.


ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆட்டமிழந்துவிட்டேன். இதுவரை நடந்த போட்டிகளை ஒட்டுமொத்தமாக அலசிப் பார்க்கும்போது நாங்கள் சிறப்பாகவே ஆடி இருக்கிறோம். துடுப்பாட்டம், பந்து



வீச்சு, களத்தடுப்பு என அனைத்து துறைகளிலும் பிரகாசித்து வருகிறோம்.

கொழும்பில் அவுஸ்ரேலியாவுடன் மோதும் போட்டி எங்களுக்கு முக்கியமானது. எங்களிடம் திறமையான வேகப் பந்து, சுழற்பந்து வீரர்கள் உள்ளனர் என்றார்.

# விக்கெட்டை வீழ்த்துங்கள்



(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணி சுழற்பந்து வீச்சாளர்கள் விக்கெட்டுகள் வீழ்த்த வேண்டும் என்று அந்த அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்தார்.


இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களது பந்து வீச்சு சரியாகத் தான் உள்ளது. இருப்பினும் நடுவரிசை ஓவரில் நாங்கள் இன்னும் சிறப்பாக செயற்பட்டு விக்கெட்டுகளை வீழ்த்த வேண்டியது அவசியமானதாகும். இந்த ஆட்டத்தில் இன்னும் நாங்கள் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

நடுவரிசை ஓவர்களில் பந்து பழையதாக மாறியதும் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும். அதனைப் பயன்படுத்தி எங்கள் அணி சுழற்பந்து வீச்சாளர்கள் விக்கெட்டை கைப்பற்றி இருக்க வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

சுழற்பந்து வீச்சாளர்களை வைத்து நான் சில மாற்றங்களைச் செய்து பார்த்தேன். பவர்பிளேயின் ஸ்டீவன் ஸ்மித்தை பந்து வீச வைத்தேன். இந்த பரீட்சார்த்தங்கள் எல்லாம் நல்ல அனுபவமாகும். கென்யா துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பாடிய விதம் பாராட்டுக்குரியது என்றார்.

# மிகப்பெரிய மோதல்



பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டம் மிகப்பெரிய மோதலாக அமையும் என்று நினைக்கிறேன் என அவுஸ்ரேலிய வீரர் மைக் ஹசி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கனடாவுக்கு எதிரான ஆட்டம் எங்களுக்கு மற்றொரு சிறந்த ஆட்டமாக அமையும். கொழும்பில் நடைபெறும் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி லீக் ஆட்டம் மிகப்பெரிய மோதலாக அமையும் என்று நினைக்கிறேன். இந்த ஆட்டத்தின் மூலம் நாங்கள் ஆட்டத்தின் உச்ச நிலையை எட்ட முயற்சிப்போம். பல துறைகளில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறோம். பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் நாங்கள் எல்லாத் துறையிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

# வெல்லும் சக்தி உள்ளது



(சிட்டாகொங்)

தென்னாபிரிக்க அணியையும் வெல்லக்கூடிய சக்தி எங்களிடம் உள்ளது என பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாகிப் அல் ஹசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்த வெற்றி எங்களுக்கு புதிய உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. எங்கள் வெற்றி இனியும் தொடரும். எனவே அடுத்த போட்டியிலும் வெற்றி பெற்று காலிறுதிக்குள் நுழைவோம். ரன்ரேட் அடிப்படையில் இல்லாமல் அடுத்த போட்டியில் வெற்றி பெற்றே காலிறுதிக்குள் நுழைய விரும்புகிறோம்.

தென்னாபிரிக்காவையும் வெல்லக் கூடிய சக்தி எங்களிடம் உள்ளது. ஒருவேளை நாங்கள் அவர்களிடம் தோற்றாலும் கூட கடும் நெருக்கடி கொடுப்போம். எந்தச் சூழ்நிலையிலும் எங்களாலும் சிறப்பாக ஆட முடியும். அந்தப் போட்டிக்காகக் கடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான தோல்வி எங்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. அதை நினைத்துக் கொண்டு இருக்க நாங்கள் விரும்பவில்லை.

என்றாலும் அதில் நல்ல பாடங்களை நாங்கள் கற்றுள்ளோம். அவ்வாறான தவறு இனிவரும் போட்டிகளில் நடவாது என்றே நம்புகின்றோம். வீரர்கள அனைவரும் நல்ல உற்சாகத்துடன் இருப்பதால் நேரடியாகவே காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வோம்.

ரசிகர்களின் உணர்வுகளை மதித்து, கௌரவமான நிலையை எட்டப் போராடுவோம் என்றார்.

# கிரிக்கெட்டை காண பொதுவிடுமுறை

(சிட்டகொங்)

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் சிட்டகொங்கில் நேற்று முன்தினம் நடந்த லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் நெதர்லாந்தைத் தோற்கடித்தது. இந்தப் போட்டியை சிட்டகாங் ரசிகர்கள் நேரில் கண்டு களிக்க வசதியாக அந்த நகரில் நேற்று முன்தினம் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டு இருந்தது. அனைத்துத் தரப்பினரும் தடங்கல் இல்லாமல் போட்டியை ரசிக்கும் நோக்கத்தில் தான் இந்த விடுமுறை அளிக்கப்பட்டது என்று துறைமுக நகரமான சிட்டகாங் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டியை ரசிகர்கள் தொலைக்காட்சியில் தங்கு தடையின்றிப் பார்க்க வசதியாக பெரிய நிறுவனங்கள் போட்டி நடைபெறும் நேரத்தில் மின்சாரத்தை உபயோகப்படுத்த பங்களாதேஷ் அரசு ஏற்கனவே தடை விதித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011


தென்னாபிரிக்க - இந்திய அணிகளுக்கு இடையிலான ஆட்டம் தென்னாபிரிக்காவின் அபாரமான ஆட்டத்தால் அவர்கள் பக்கம் வெற்றியைக் கொடுத்தது. ஆனாலும் இந்திய அணி ஏன் தோற்றது என்ற வாதப் பிரதி வாதங்கள் இன்னும் ஓயவில்லை. கேள்விக் கணைகள் டோனியை நோக்கிப் பாய்கின்றன. சமாளித்துக் கொண்டே வருகின்றார். இருந்தாலும் ஆட்ட வீரர்களின் ஒழுங்கு முறையை மாற்றியது தவறா? இதனால் தான் மத்திய வரிசை சரிந்ததா என்றொரு கேள்வி எழுகின்றது. அதற்கப்பால் பின்வரிசை வீரர்கள் சிறிது நிதானித்திருந்தால் என்ன என்றொரு கேள்வியும் எழுகின்றது. மறுபுறம் இறுதி ஓவரை நெஹ்ராவிற்குக் கொடுக்காமல், சகிர்கானுக்கு அல்லது ஹர்பஜனுக்கு ஒதுக்கியிருந்தால் கடினமான இறுதி ஓவர் எண்ணிக்கையான பதின் மூன்றை தென்னாபிரிக்கா எட்டியிருக்காது என்ற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

இதேவேளை, இன்னொரு வளமாகப் பார்க்கையில் இந்தியா ஏன் தோற்றது என்று காரணங்களைத் தேடும்போது ஏதோ தென்னாபிரிக்கா வென்றது தற்செயல் என்பது போலவும், அந்த ஆட்டம் இந்தியாவுக்கென்றே எழுதப்பட்டது போலவும் அசந்தர்ப்பத்தால் தென்னாபிரிக்காவின் கைகளுக்குப் போய்விட்ட மாதிரியும் ஒரு படம் காட்ட முனைவதையும் அவதானிக்க முடிகின்றது. ஆனால், நம்பிக்கை நட்சத்

தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

திரம் ஸ்மித் 12 ஓட்டங்களுடன் வெளியேற அதன் பின் வந்த கலிஸ் எத்தனை நிதானமாகவும் பொறுப்புணர்ச்சியுடனும் 69 ஓட்டங்கள் சேர்த்தார் என்பதைப் பார்த்தால் சேவாக் அதிரடி ஆரம்பித்த நேரத்தில் இருந்தே வெற்றிக் கனி தமக்குத் தான் என்ற உறுதி அவர்களிடம் இருந்ததைக் காணலாம். அதேவேளை, 173 மொத்த ஓட்ட எண்ணிக்கையின் மூன்றாவதாகக் கலிஸ் வீழ்ந்தபோது அதன் பின் வந்த வீரர்கள் மனம் சலித்துப் போய்விடவில்லையே. டி. வில்லியர்ஸ், டுமினி இருவரும் இணைந்தும், பின் பின்னர் வந்த டூ பிளேசிஸ், ஏன் இறுதி வரிசை ஆட்டக்காரர் போத்தா எல்லோரும் பொறுப்புணர்ச்சியுடனும் நம்பிக்கையுடனும் ஆட்டத்தை முன்னெடுத்துச் சென்ற விதம் எவ்வளவு பாராட்டுக்குரியது. 400 ஓட்டங்கள் எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட அணி முழுதாக 50 ஓவர்கள் கூடத் துடுப்



பெடுத்து ஆட அனுமதிக்காத டேல் ஸ்ரெயினின் பந்து வீச்சுத் திறமைக்கு என்ன அளவு கோல்?

இப்படியான சில துளிகளைப் பார்க்கும்போது மிகப் பலம் வாய்ந்த இந்திய அணியை சரியான திட்டமிடலும், முழு நம்பிக்கையும் கொண்டு அதை விடப் பலமான தென்னாபிரிக்கா தோல்வியுறச் செய்தது என்பதும் சரியான முடிவல்லவா? இந்திய அணி களத்தடுப்பைச் சிறப்பாகவே செய்தது. பிடிகளை அபாரமாக எடுத்தது. (போத்தாவின் பிடியை ரென்யா எடுத்தமை) விக்கெட் காப்பாளர் டோனி கலிசை ஆட்டமிழக்கச் செய்த விதம் எல்லாம் மிகத் திறமையை வெளிக் காட்டிய சந்தர்ப்பங்கள். ஆனாலும் இந்தியா தோற்றதென்றால், இந்திய அணியைவிடத் திட்டமிடல் மற்றும் திறமை தென்னாபிரிக்க அணியிடம் கூடுதலாக இருந்தது என்று ஏற்றுக் கொள்வதில் என்ன தவறு?

ஜோசப் கிருஷ்ணா

# சலிக்கலாமோ ஸ்வான்

உலகக் கிண்ணப் போட்டிக்கான அட்டவணை நீண்ட நாட்களை உள்ளடக்கியதாக உள்ளது என இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: அட்ட




வணை அபத்தமாக இருக்கிறது. நாங்கள் சிறப்பாக செயற்படாதது குறித்து வருத்தம் தெரிவிக்க முடியாது. நாங்கள் சிறப்பான ஆட்டத்தைத் தொடங்கவில்லை. தட்பவெப்ப நிலை எங்களுக்கு பாதிப்பாக உள்ளது.

அடுத்து வரும் ஆட்டங்களில் வெற்றி பெற்று உலகக் கிண்ணத்துடன் நாடு திரும்ப வேண்டும் என்பது எங்கள் நோக்கமாகும். அதற்கான முழு முயற்சியில் ஒருங்கிணைந்து செயற்படுவோம். என்றார்.

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள இங்கிலாந்து மற்றும் மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியிள் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..............................

முகவரி : ..............................

போ.இல : ..............................

விடைகள் : 01) ..............................

02) ..............................

**போட்டி இல: 27**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில் அறிவிக்கப்படும்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

தினமுரசு காரியாலயம்
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தினமுரசு விளம்பரப்பணிமனை
M.P.C.S. கட்டடம்
127, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

விடைகளை 17 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

## வீழ்த்தினால் கிண்ணம்




(லண்டன்)

பந்து வீச்சில் விக்கெட்டை வீழ்த்தக் கூடிய அணி தான் இந்த உலகக் கிண்ணத்தை வெல்லும் என இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் ஜாம்பவான் இயன் பொத்தம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

பத்தாவது உலகக் கிண்ணத்தை வெல்லும் அணியாக இந்தியாவைக் கருதவில்லை. சில துடுப்பாட்ட வீரர்கள் ரசிகர்களுக்காக விளையாடுகிறார்கள் என்று இந்திய அணித் தலைவர் டோனி விமர்சனம் செய்தது சரியானதாகும். அவர்கள் ஒன்றும் தூதர்கள் இல்லை. வீரர்களை விமர்சிக்க தலைவர் டோனிக்கு உரிமை உள்ளது. பந்து வீச்சில் விக்கெட்டை வீழ்த்த கூடிய அணி தான் இந்த உலகக் கிண்ணத்தை வெல்லும். அப்படிப் பார்க்கையில் அவுஸ்ரேலியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகியவை அபாயகரமான அணிகளாகும். இந்த அணிகளுக்கு பெரும்பாலும் கிண்ணத்தை வெல்லக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருப்பதாகவே நான் உணர்கின்றேன் என்று கூறியுள்ளார்.

# அதிகரித்த நம்பிக்கை



(கொல்கத்தா)


எங்கள் வீரர்கள் இப்போது மனரீதியாக துடிப்போடு உள்ளனர். இந்தியாவைத் தோற்கடித்ததே இதற்குக் காரணம் என தென்னாபிரிக்க அணியின் பயிற்றுநர் கோரிவொன்சில் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடினமான சூழ்நிலையிலும் இந்தியாவை வீழ்த்தியது எங்களுக்கு கூடுதல் பலத்தை அளித்துள்ளது. வீரர்கள் அனைவரும் மனவலிமை பெற்றுள்ளனர்.

எந்த அணியை எதிர்கொள்ளவும் நாங்களும் முழு அளவில் தயாராகி இருக்கிறோம். நாங்கள் அடுத்த போட்டிகளிலும் வெற்றி பெறுவோம் என நம்புகிறோம். எனவே 'பி' பிரிவில் நாங்கள் முதலிடத்துக்கு வந்து விடுவோம் என்று நம்புகிறோம்.

எங்கள் வீரர்களுக்கு ஏற்பட்டுள்ள காயம் சாதாரணமானது. எனவே அணிக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது. எந்த விதமான போட்டிகளையும் எதிர் கொள்ளும் வகையில் வீரர்கள் அனைவரும் பயிற்சி பெற்றுள்ளனர். எப்படியாவது உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற லட்சியத்துடன் இருக்கிறோம். அந்த இலட்சியத்திற்காக எங்கள் அணி வீரர்கள் ஒருங்கிணைந்த ஆட்டத்தை உணர்வுடன் வெளிப்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன் என்றார்.

## தலைமை மாறாது



(சிட்னி)

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியின் தலைவர் ரிக்கி பொண்டிங், போட்டி முடிந்ததும் மாற்றப்படலாம் என்று பேசப்பட்டது, மைக்கல் கிளார்க் தலைவராக ஆதரவு அதிகம் இருப்பதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபைத் தலைமை நிர்வாகி ஜேம்ஸ் சுதர்லேண்ட் அளித்த ஒரு பேட்டியில் ரிக்கி பொண்டிங் தலைமையில் அவுஸ்ரேலிய அணி சிறப்பாக செயற்பட்டு வருகிறது என்று பாராட்டி இருக்கிறார். இதனால் பொண்டிங்கின் தலைமைப் பதவிக்கு வருங்காலத்தில் பாதிப்பு வராது என்று கூறப்படுகிறது.

ICC Cricket World Cup 2011

## அணிகள் பெற்ற புள்ளிகளின் நிலை

'பிரிவு ஏ'

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமநிலை | முடிவற்றது | புள்ளி | நிகரஓ. விதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01) நியூசிலாந்து | 05 | 04 | 01 | 00 | 00 | 08 | + 1.9570 |
| 02) பாகிஸ்தான் | 05 | 04 | 01 | 00 | 00 | 08 | + 0.7290 |
| 03) இலங்கை | 05 | 03 | 01 | 00 | 01 | 07 | + 2.7050 |
| 04) அவுஸ்ரேலியா | 04 | 03 | 00 | 00 | 01 | 07 | + 1.6450 |
| 05) சிம்பாப்வே | 05 | 01 | 04 | 00 | 00 | 02 | - 0.6690 |
| 06) கனடா | 05 | 01 | 04 | 00 | 00 | 02 | - 2.0460 |
| 07) கென்யா | 05 | 00 | 05 | 00 | 00 | 00 | - 3.0050 |
| பிரிவு 'பி' | | | | | | | |
| 01) தென்னாபிரிக்கா | 05 | 04 | 01 | 00 | 00 | 08 | + 1.6060 |
| 02) இந்தியா | 05 | 03 | 01 | 01 | 00 | 07 | + 0.7680 |
| 03) மேற்கிந்தியத்தீவுகள் | 04 | 03 | 01 | 00 | 00 | 06 | + 2.2060 |
| 04) பங்களாதேஷ் | 05 | 03 | 02 | 00 | 00 | 06 | - 0.7650 |
| 05) இங்கிலாந்து | 05 | 02 | 02 | 01 | 00 | 05 | + 0.0130 |
| 06) அயர்லாந்து | 05 | 01 | 03 | 00 | 00 | 02 | - 0.8810 |
| 07) நெதர்லாந்து | 05 | 00 | 05 | 00 | 00 | 00 | - 2.3860 |

## இன்றைய ஆட்டம்

அவுஸ்ரேலியா எதிர் கனடா

மைதானம் பெங்களூர்: பகல் ஆட்டம்

## தென்னாபிரிக்கா வெற்றி

**அயர்லாந்து அணிக்கெதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 131 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.**

**பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 34ஆவது ஆட்டம் கொல்கத்தா மைானத்தில் பகலிரவுப் போட்டியாக இடம் பெற்றது. இதில் முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 50ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டுமினி 99 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு 273 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அயர்லாந்து அணி 33.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இதில் வில்சென் 31 ஓட்டங்களைப் பெற்றார். போட்டியின் ஆட்டநாயகனாக டுமினி தெரிவானார்.**



## தினமுரசு தென்னாபிரிக்கா எதிர் அயர்லாந்து SCORE CARD

மைதானம் : கொல்கத்தா திகதி : 15-03-2011

நாணயச் சுழற்சி வெற்றி அயர்லாந்து : முதலில் களத்தடுப்பு.

ICC Cricket World Cup 2011

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். அம்லா | c டொக்ரல் b ரன்கின் | 18 |
| 02) சி. ஸ்மித் | run out மூனி | 07 |
| 03) வொன்விக் | b டொக்ரல் | 42 |
| 04) ஜக் கலிஸ் | run out ஒபிரயன்/போட்டபீல்ட் | 19 |
| 05) பி. டுமினி | c கே.ஜே.ஒபிரயன் b மூனி | 99 |
| 06) டு. பிளெசிஸ் | c ஜோன்ஸ்ரன் b ஸ்ரேலிங் | 11 |
| 07) ஏ. இங்கிரம் | b ஜோன்ஸ்ரன் | 46 |
| 08) ஜே. போத்தா | not out | 21 |
| 09) ஜே. பீற்றர்சன் | not out | 00 |
| 10) எம். மோர்கல் | | |
| 11) எல். ஸ்ரெயின் | | |
| உதிரிகள் | (b2, lb 3,w4) | 09 |
| மொத்தம் | (7 w : 50 ஓவர்கள்) | 272 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) போட்டபீல்ட் | c ஸ்மித் b மோர்கல் | 06 |
| 02) ஸ்ரேலிங் | c கலிஸ் b மோர்கல் | 10 |
| 03) சி. ஜொய்ஸ் | lbw b போத்தா | 12 |
| 04) என்.ஜே. ஒபிரயன் | c வொன்விக் b கலிஸ் | 10 |
| 05) சி. வில்சென் | lbw b பீற்றர்சன் | 31 |
| 06) கே. என். ஒபிரயன் | c அம்லா b பீற்றர்சன் | 19 |
| 07) ஏ. கியூசாக் | c ஸ்மித் b பீற்றர்சன் | 07 |
| 08) எவ். மூனி | c வொன்விக் b கலிஸ் | 14 |
| 09) ஜோன்ஸ்ரன் | c வொன்விக் b டுமினி | 12 |
| 10) டொக்ரல் | c வொன்விக் b மோர்கல் | 16 |
| 11) ரன்கின் | not out | 00 |
| உதிரிகள் | (w4) | 04 |
| மொத்தம் | (all out: 33.2 ஓவர்கள்) | 141 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ரன்கின் | 10 | 59 | 01 |
| ஜோன்ஸ்ரன் | 10 | 76 | 01 |
| எவ். மூனி | 08 | 36 | 01 |
| டொக்ரல் | 10 | 37 | 01 |
| ஸ்ரேலிங் | 10 | 45 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| எம். மோர்கல் | 5.2 | 33 | 03 |
| ஜக் கலிஸ் | 06 | 20 | 02 |
| ஜே. போத்தா | 08 | 32 | 01 |
| ஆர்.ஜே. பீற்றர்சன் | 08 | 32 | 03 |
| பி. டுமினி | 02 | 11 | 01 |

**131 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி. ஆட்டநாயகன் : பி. டுமினி**

அனுசரணையாளர்:
TASTE OF JAFFNA RESTAURANT
யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆடம்பர
உல்லாச கலாசார குடும்ப உணவகம்
யாழ். உணவு வகைகள், மேலைத்தேய, கீழைத்தேய உணவு வகைகளை
குடும்பத்துடன் சுவையாக உண்டு மகிழ்ந்திடலாம்.
இல.101, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:021 222 1322 (C/614) தொலைநகல்: 021 222 1323
பண்பாட்டு மகிழ்வில் நிதானம்
பாரம்பரிய மேம்பாட்டு முதிர்வு
அகங்குளிர வரவேற்கும் பணிவு
பாங்கான பணிகள்



# கப்பலைக் கடத்தும் முயற்சியில் ஈடுபட்ட சோமாலியக் கொள்ளையர் பிடிபட்டனர்



(சென்னை)

சோமாலியா நாட்டு கடற்கொள்ளைக்காரர்கள் அவர்கள் நாட்டு வழியாக செல்லும் கப்பல்களை சிறைப்பிடித்து பணயத்தொகையாக கோடிக் கணக்கில் வாங்கிக்கொண்டு அவர்களை விடுவிப்பதை வாடிக்கையாகக் கொண்டு இருந்தனர்.

சமீபத்தில் 13 இந்திய மாலுமிகள் கடற்கொள்ளையர்களால் சிறைப்பிடிக்கப்பட்டனர். அவர்களை விடுவிக்க வேண்டுமானால் கோடிக்கணக்கில் பணம் தரவேண்டும் என்று கொள்ளையர்கள் நிபந்தனை விதித்தனர். இதற்கு மத்திய அரசு சம்மதிக்கவில்லை. அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவும் மறுத்து விட்டது.

இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் அரபிக்கடலில் வந்து கொண்டிருந்த வாங்கூர் பிரிட்ஜ் என்ற வணிகக் கப்பலை கடற்கொள்ளையர் கப்பல் தாக்கியது. வணிகக் கப்பலை கடத்தும் நோக்கத்துடன் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் மிரண்டு போன வணிக கப்பல் கேப்டன் கடலில் வலம் வந்த இந்திய கடற்படை கப்பல்களுக்கு தகவல் அனுப்பி உதவி கேட்டார்.

இதைத் தொடர்ந்து ஐ.என்.எஸ் கல்பேனி, என்ற கடற்படை கப்பல் அந்தப் பகுதிக்கு விரைந்தது. கல்பேனி கப்பல் மீது கொளளையர்கள் துப்பாக்கியால் சுட்டனர். இதற்கு கல்பேனி பதிலடி கொடுத்தது.

இதற்கிடையே கடற்படை கண்காணிப்பு ஹெலிகாப்டர் கொள்ளையரின் கப்பலை தொடர்ந்து கண்காணித்து வந்தது. இதைக் கவனித்து விட்ட கடற்கொள்ளையர்கள் வணிகக் கப்பலை கடத்துவதை கைவிட்டு அந்த பகுதியில் இருந்து தப்பிக்க முயன்றனர்.

அப்போது இந்தியாவின் ஐ.என்.எஸ் குர்கி கடற்படைக் கப்பல் அங்கு விரைந்து வந்தது. இந்த 2 கப்பல்களும் கொள்ளையர்களின் தலைமைக்கப்பலான வேகா 5 என்ற கப்பலை சுற்றிவளைத் தன.


இந்தச் சம்பவம் மும்பையில் இருந்து 600 கடல்மைல் தொலைவில் நடந்தது. சுற்றி வளைக்கப்பட்ட கப்பலில் 61 கடற்கொள்ளையர்களும் அவர்களால் சிறைப்பிடிக்கப்பட்ட 13 இந்திய மாலுமிகளும் இருந்தனர்.

கொள்ளையர்களைப் பிடிதத கடற்படை வீரர்கள் அவர்களிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றினார்கள். பிறகு இந்த கப்பலையும் கடற்கொள்ளையர்களையும் இந்தியாவுக்கு கடற்படை வீரர்கள் கொண்டு வந்தனர்.

மும்பைக்கு அவர்கள் வந்து சேர்ந்ததும் கப்பலில் இருந்த இந்திய மாலுமிகள் 13 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

வேகா கப்பல் மொசாம்பிக் நாட்டில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கப்பல் ஆகும். இது கடந்த ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி கடத்தப்பட்டது. அதை கடற்கொள்ளையர்கள் கடற்கொள்ளைக்குப் பயன் படுத்தி வந்தனர்.

# அ.தி.மு.க கூட்டணியிலிருந்து விலகல் தனித்துப் போட்டியிட கார்த்திக் முடிவு



(சென்னை)

அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என, நடிகரும், அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளருமான கார்த்திக் கூறியுள்ளார்.

அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி தங்கள் கூட்டணியில் இடம் பெற்றுள்ளதாக அ.தி.மு.க அறிவித்திருந்தது.

இந்நிலையில் மார்ச் 15ஆம் திகதி சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய நடிகரும், அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சியின் பொதுச்செயலாளருமான கார்த்திக்,

அதிமுகவுக்கு நாடாளும் மக்கள் கட்சி ஆதரவு என்று கூறி 55 நாட்கள் ஆகின்றன. அ.தி.மு.க கூட்டணியில் அகில இந்திய நாடாளும் மக்கள் கட்சி 3 தொகுதிகள் கேட்டிருந்தது.

ஆனால் அ.தி.மு.க தரப்பில் இருந்து இதுவரை எங்களிடம் பேச்சுவார்த்தை வைத்துக் கொள்ளவில்லை. எங்கள் கட்சிக்கு படிப்படியாக வெறும் அவமானங்கள் மட்டுமே காத்திருந்தது.

இதை நாங்கள் முழுமையாக உணர்ந்துவிட்டோம். அ.தி.மு.க.வுடன் கூட்டணி என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார். மேலும் தமிழகத்தில் 25 முதல் 30 தொகுதிகளில் போட்டியிடப் போவதாக முடிவு செய்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

# இந்திய அணு உலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மறு ஆய்வுக்கு உத்தரவு

ஜப்பான் பூகம்பம் -சுனாமி பாதிப்பு எதிரொலியாக, இந்தியாவில் உள்ள அணு மின் நிலையங்களின் அணு உலைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய மறு ஆய்வு நடத்தும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. பிரதமர் மன்மோகன்சிங், நாடாளுமன்றத்தில் இந்த தகவலை வெளியிட்டார்.

ஜப்பான் நாட்டில், பயங்கர பூகம்பம் மற்றும் சுனாமியால் ஏற்பட்ட பேரழிவு குறித்து பிரதமர் மன்மோகன்சிங் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிக்கை தாக்கல் செய்தார்.

ஜப்பானில் ஏற்பட்ட இந்த துயர நிகழ்விற்காக இந்திய மக்கள் சார்பிலும் நாடாளுமன்றத்தின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலை அப்போது அவர் தெரிவித்துக் கொண்டார். அவர் மேலும் கூறியதாவது -

ஜப்பானில் ஏற்பட்ட இயற்கை பேரிடர் நிகழ்வுகளால் அங்குள்ள சில அணு மின் நிலையங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதை கவனத்தில் கொண்டு, நமது நாட்டின் அணு உலை பாதுகாப்புக்கு அதிகபட்ச முக்கியத்துவம் அளித்து உள்ளது.

இந்திய அணுசக்தித் துறை, இந்திய அணுசக்திக் கழகம் போன்ற அமைப்புகளுக்கு இது குறித்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, பூகம்பம் சுனாமி போன்ற இயற்கை சீற்றங்களை தாங்கும் சக்தி இந்திய அணு மின் நிலையங்களுக்கு உள்ளதா என்பதை மறு ஆய்வு செய்யும்படி கேட்டிருக்கிறோம்.

இந்தியாவின் அணுசக்தி பாதுகாப்பு கட்டுப்பாடு ஆணையத்தை பலப்படுத்தும் பணியையும் அணுசக்தி துறை மேற்கொண்டு வருகிறது. இதனால், இந்திய அணு உலை பாதுகாப்புக்கு எந்தப் பங்கமும் வராது. தற்போது இந்தியாவில் 20 அணு உலைகள் செயற்பட்டு வருகின்றன.

கடந்த 2002 ஆம் ஆண்டில் குஜராத்தில் ஏற்பட்ட பூகம்பத்தினால் காக்ரபார் அணுமின் நிலையம் எந்தவித பாதிப்பும் இன்றித் தொடர்ந்து இயங்கியது.

அதேபோல் 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் போது, சென்னை அருகே கல்பாக்கம் அணு மின்நிலையத்தில் கதிர் வீச்சுப் பாதிப்பு எதுவும் இன்றி, பாதுகாப்புடன் நிறுத்தி வைக்கப்பட்டதையும், சில நாட்களில் உரிய பாதுகாப்புடன் அது மீண்டும் இயக்கப்பட்டதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன் என்று கூறினார்.





## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர்: சு. அபிவர்ஷினி (அபி)
முகவரி: நாவல்நகர், கல்மடுநகர், கிளிநொச்சி.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ..............................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# "சட்டப்படி குற்றம்" படத்திற்குத் தடை விதிக்க வேண்டுமெனக் கூறுகிறார் தி.மு.க. எம்.எல்.ஏ

(சென்னை)

விஜயின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் 'சட்டபபடி குற்றம்' என்ற படத்தை இயக்கியுள்ளார். இதில் சத்யராஜ், சீமான், விக்ராந்த் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். சமூகத்தில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் காட்டில் பதுங்கி யுத்தப் பயிற்சி எடுத்து சத்யராஜ் தலைமையில் போராடுவதே கதை.

ஆறு பேர் பலியானால், நாங்கள் ஆயிரம் பேர் பலியாவோம் என்பது போன்ற 'பஞ்ச' வசனங்கள் இதில் உள்ளன. இந்தப் படத்தின் பாடல் சி.டி. வெளியீட்டு விழாவில் எஸ்.ஏ.சந்திர சேகர் பேசும்போது, ஒருவர் 50 லட்சம் ரூபாய் செலவில் தேர்தலில் வென்று மந்திரியாகிறார்.

பிறகு அவர் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார். இது சட்டப்படி குற்றம் இல்லையா? என்றார். இப்படம் தற்போதைய அரசியல் சூழலைச் சித்தரிப்பதாகவுள்ளது என்கின்றனர்.

சத்யராஜ் சேகுவேரா செட்டப்பில் வருகிறார். வருகிற 25 ஆம் திகதி இப்படம் வெளியாகிறது. 'சட்டப்படி குற்றம்' படத்தை எதிர்த்து செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. தேர்தல் கமிஷனுக்குப் புகார் மனு அனுப்பி



உள்ளார். அதில் கூறி இருப்பதாவது -

எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கியுள்ள சட்டப்படி குற்றம் படத்தில் குறிப்பிட்ட அரசியல் கட்சி பற்றி விமர்சிக்கப்பட்டுள்ளது. இது தேர்தல் விதி முறைக்கு முரணானது.

இப் படத்தைத் தேர்தல் கமிஷன் பார்த்து அதன் பிறகு வெளியிட அனுமதிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இது குறித்து நிருபரிடம் அவர் கூறும்போது, இந்த படத்தில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டணி பற்றி கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வந்தது. எனவே இதைத் தடைசெய்ய வேண்டும் என்றார்.

# சமாதானத்தை சீர்குலைக்கும் முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது

## பாதுகாப்புச் செயலர் கோத்தபாய தெரிவிப்பு



(கொழும்பு)

எந்தவொரு பயங்கரவாத அமைப்பையும் நாட்டில் தலைதூக்கவோ, வென்றெடுக்கப்பட்ட சமாதானத்தை சீர்குலைப்பதற்கு புலம்பெயர்ந்த சக்திகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கோ இடமளிக்கமாட்டோமென பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி நிகழ்வொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பங்குபற்றி கருத்துக்களை தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனாதிபதி 2005ஆம் ஆண்டு பாதுகாப்புப் படையினரின் பொறுப்பையேற்கும் முகமாக என்னை பாதுகாப்பு செயலாளராக நியமித்தார். அதன்போது இந் நாட்டில் போர் வீரர் அன்னியப்படுத்தப்பட்ட ஒருவராக கருதப்பட்டதுடன், சீருடை அணிந்து இருப்பவர் மூன்றாவது பிரஜையாகவே கருதப்பட்டார். ஆனால் தற்போது துணிச்சலாக போர்க்களத்தில் செயற்பட்டு யுத்தத்தை வென்றெடுத்தது மட்டுமல்லாது அரசாங்கத்துடன் இணைந்து அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மூன்று தசாப்தங்களாக ஏற்பட்ட துன்பங்கள் தொடர்பாக அனைவரும் அறிந்திருக்கின்றார்கள். யுத்த முடிவைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சு தனது செயற்பாடுகளை இடைநிறுத்தவில்லை, பல்வேறுபட்ட புதிய நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு மேற்கொண்டு வருகின்றது.

பயங்கரவாதம் இந் நாட்டில் தலைதூக்கக் காரணமாக இருந்த காரணிகளை அறியாவர்களே தேவையற்ற கோஷங்களை எழுப்பி வருகின்றனர். இருந்தும் நாம் அக்குழுவினரிடம் உண்மை நிலவரங்களை தெரியப்படுத்தி, அறிவூட்டும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் நீண்டகாலத்திற்கு நிலைக்காது

## என்கிறார் சஜித்

(கொழும்பு)

நீண்ட காலத்திற்கு இந்த அரசாங்கம் ஆட்சி நடத்தாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது,

இந்த அரசாங்கம், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதன் பின்னர் மக்களை மறந்து செயற்படுகின்றது.

இந்த அரசாங்கத்திற்கு வீடுகள் மற்றும் கட்டடங்கள் நிர்மாணித்துப் பழக்கமில்லை. நிர்மாணிக்கப்பட்ட வீடுகள் மற்று கட்டடங்களை உடைக்கும் பழக்கமே காணப்படுகிறது.



மக்களின் விருப்பு வெறுப்புக்களை அறிந்து கொள்ளாது ஆட்சி நடத்தினால் நீண்ட காலத்திற்கு நீடிக்க முடியாது.

அரசாங்கம் மக்களின் வாழ்க்கையை சீரழித்திருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

# ஜப்பானிய அணு உலை வெடிப்பு இலங்கைக்கு பாதிப்பு இல்லை

(கொழும்பு)

ஜப்பானிய அணுஉலை வெடிப்புகளால் இலங்கையில் கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்று இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

ஜப்பானில் ஏற்பட்ட புவியதிர்வு மற்றும் சுனாமியை அடுத்து அங்குள்ள புகுசிமா அணுஉலையில் அடுத்தடுத்து வெடிப்புகள் ஏற்பட்டன.

இதனால் கதிர்வீச்சுத் தாக்கம் ஏற்படும் என்ற அச்சத்தில் இலட்சக்கணக்கான மக்களை ஜப்பான் அந்தப் பகுதியில் இருந்து வெளியேற்றி வருகிறது.

இந்தநிலையில் உலகில் பல்வேறு நாடுகளிலும் இந்தக் கதிர்வீச்சுப் பாதிப்புப் பற்றிய வதந்திகள் பரவத் தொடங்கியுள்ளன.

நேற்று முன்தினம் பிலிப்பைன்சில் அமில மழை பெய்யவுள்ளதாக கைத்தொலைபேசிகள் மூலம் குறுந்தகவல் வதந்திகள் பரவின.

இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அச்சமடைந்தனர்.

இந்தநிலையிலேயே இலங்கைக்கு கதிர்வீச்சுப் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான தூரம் மிக அதிகம். அத்துடன் ஜப்பானில் இருந்து காற்று கிழக்குப் புறமாகவே வீசும்.

எனவே இலங்கைக்கு இதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று இலங்கையின் வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# வவுனியாவில் அமைக்கப்படவுள்ள உலகின் மிகப்பெரிய புத்தர்சிலை

(கொழும்பு)

உலகில் மிகப் பெரிய புத்தர் சிலையை அரசாங்கம் வவுனியாவில் அமைக்கவுள்ளது.

சமாதி நிலையில் அமையவுள்ள இந்தப் புத்தர் சிலையை கல்வி,பண்பாடு,சமூக சேவைகளுக்கான அனைத்துலகநட்புறவுச் சங்கத்தின் உதவியுடன் அரசாங்கம் நிறுவவுள்ளது.

தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் சேனாரத் திசநாயக்கவின் துணையுடன் இந்தப் பாரிய புத்தர் சிலையை அமைக்கவுள்ளதாக கல்வி, பண்பாடு, சமூக சேவைகளுக்கான அனைத்துலக நட்புறவுச் சங்கத்தின் நிறுவுனர் பிலப்பிட்டிய பஞ்ஞதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

புலிகளுக்கு எதிரான போரில் பங்கேற்ற படைவீரர்களைப் போற்றிக் கௌரவிக்கும் வகையிலேயே இந்தப் புத்தர் சிலை அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புத்தர் சிலை அமைக்கும் திட்டத்துக்கு 1000 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

522 அடி உயரம் கொண்டதாக அமையவுள்ள இந்தப் புத்தர் சிலை உலகிலேயே அதிக உயரம் கொண்ட புத்தர் சிலையாக இருக்கும்.

சீனாவின் லுசான் பகுதியில் அமைந்துள்ள 420 அடி உயரப் புத்தர் சிலையே தற்போது உலகில் மிக உயர்ந்த புத்தர் சிலை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் புத்தர் சிலை அமைநதுள்ள பீடத்துடன் சேர்த்து 502 அடி உயரமானது.

மிக உயர்ந்த புத்தர் சிலை குருநாகலில் உள்ளது. இது 88 அடி உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரிவினைவாதிகளிடம் மீண்டும் தமிழ்மக்கள் சிக்கிவிடக் கூடாது

## அமைச்சர் சம்பிக்க அறிவுரை

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீண்டும் பிரிவினைவாதிகளிடம் சிக்கிவிடாமல் ஆளும் கட்சிக்கு இம்முறை மக்கள் வாக்களித்து வெற்றிபெறச் செய்ய வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



மேலும் அவர் தெரிவிக்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வாழ்வாதாரத்தை மத்திய அரசாங்கமே வழங்க முடியும். இத் தேர்தலில் அரசாங்கத்தை தோல்வியடையச் செய்வதால் நாட்டில் எவ்வித மாற்றங்களும் ஏற்படப்போவதில்லை

தமிழ்- சிங்கள மக்களிடையே தற்போது எந்தப் பிரச்சினையும் கிடையாது. எனவே இடம்பெயர்ந்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஐக்கிய மக்கள் சுகந்திர முன் னணியை வெற்றிபெறச் செய்யவேண்டும் எனத் தெரிவித்தார்.

# அழைப்புக்குக் காத்திருக்கும் விசேட மருத்துவக்குழுவினர்

(கொழும்பு)

ஜப்பானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு மருத்துவக்குழு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் இலங்கையிலுள்ள ஜப்பானிய தூதரகத்தின் அழைப்பிற்காகவே அந்தக்குழு காத்திருப்பதாகவும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஜப்பானிய தூதரகத்தின் அழைப்புக்கிடைத்ததும் மேற்படி குழு அந்த நாட்டிற்கு அனுப்பிவைக்கப்படும். ஜப்பானுக்குச் செல்வதற்கான மருத்துவக் குழுவைத் தயார் செய்யுமாறு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சுகாதார அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதன்படி விசேட மருத்துவர்கள் பயிற்றப்பட்டதாதியர்கள், மருந்துக் கலவையாளர்கள் உட்பட்ட மருத்துவக்குழு தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# மீண்டும் பிரேமதாஸா யுகமொன்றை ஏற்படுத்தி இளைஞர்,யுவதிகளை பலி கொடுக்கத் தயாரா?

## அமைச்சர் ஜகத் புஸ்பகுமார கேள்வி



(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்து பிரேமதாசா யுகமொன்றை மீண்டும் ஏற்படுத்த உதவுமாறு கேட்பது ஆயிரக்கணக்கான இளைஞர் யுவதிகளை மீண்டும் பலி கொடுப்பதற்கா? என்று தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார கேள்வி எழுப்பியுள்ளார்.**

தனமல்வில, வெள்ளவாய, புத்தல ஆகிய பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்கு மின்சார வசதியை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் ஜகத் புஷ்பகுமார இவ்வாறு கூறினார். அங்கு தொடர்ந்து பேசிய அவர்,

பிரேமதாச யுகத்தை மக்கள் இன்னும் மறக்கவில்லை.

66 ஆயிரம் இளைஞர் யுவதிகளைப் பலி எடுத்த அந்த இருண்ட யுகம் மீண்டும் ஏற்பட நாட்டின் எந்தவொரு பிரஜையும் எந்த வகையிலான பங்களிப்பையும் வழங்கப் போவதில்லை. அன்று அப்பாவி மக்களைக் கொலை செய்து, மக்களுக்குச் சேவை செய்வதற்காக இருந்த பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் விவசாய சேவை நிலையங்களுக்குத் தீ வைத்து அழித்தவர்கள் இன்று விவசாயிகளைப் பற்றிப் பேசுவது கேலியாக உள்ளது.

இது பற்றி மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டிய காலம் வந்துள்ளது. அதற்கான பதிலை எதிர்வரும் 17ஆம் திகதி மக்கள் வழங்குவார்கள். இன்று நாட்டில் சுதந்திரமும் அபிவிருத்தியும் ஏற்பட்டுள்ளமை கிராமப்புற தலைமைத்துவத்தின் காரணமாகவேயாகும். கிராமத்தில் இடம்பெறும் அபிவிருத்தியைச் சகித்துக் கொண்டிருக்க முடியாதவர்களுக்குப் பல்வகை நோய்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளன.

அரசாங்கத்தின் நோக்கம் அடுத்த சில வருடங்களில் நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்க வேண்டும் என்பதாகும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார.

# குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தி கட்டளைத் தளபதியுடன், சுவிஸ் அதிகாரிகள் சந்திப்பு



(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக நேற்றுமுன் தினம் யாழ் பாதுகாப்பு படையினரின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவை, இலங்கையில் அமைந்துள்ள சுவிஸ் தூதரகத்தின் மூன்று உறுப்பினர்கள் தூதுவர் தோமஸ் லிச்சர் தலைமையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ் பாதுகாப்பு தலைமையகத்தில் வைத்து கட்டளைத் தளபதியால், தூதுவர் தோமஸ் லிச்சர், அபிவிருத்தி மற்றும் ஒத்துழைப்புத் தொடர்பான சுவிஸ் தூதரகத்தின் நிகழ்ச்சி முகாமையாளர் மார்டின் ஸ்டூடர் மற்றும் தூதரகத்தின் திட்டமிடல் முகாமையாளர் ஜினிவிவ் கொன்டிஸ் ஆகியோர் வரவேற்கப்பட்டனர். பின்னர் குடாநாட்டில் இடம் பெற்று வரும் மிதிவெடியகழ்வு மற்றும் மீள்குடியேற்றம் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

துரித கதியில் இடம்பெற்று வரும் மிதிவெடியகழ்வு தொடர்பாக விரிவாக தகவல்கள் வழங்கப்பட்டதுடன், முக்கியமாக அரசாங்கத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டு இருப்பதையும் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்தும் விளக்கப்பட்டது.

சுவிஸ் தூதுவர் யாழ் குடாவின் பாதுகாப்புத் தன்மை குறித்தும், இடம்பெற்றுவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்ததோடு, யாழ்.மக்களுக்காக தொடரவிருக்கும் வீடற்றோருக்கான வீட்டுநிர்மாண நடவடிக்கைகள், வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் மனிதாபிமான செயற்திட்டங்களுக்குத் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க உறுதியளித்தார்.

# வட்டிக்கு பணம்கொடுத்தவர் பிரிட்டனில் மாட்டினார்

(கொழும்பு)

லண்டன் ஈஸ்ட்காம் பகுதியில் தமிழர்களிடம் அறா வட்டிக்குப் பணத்தை வழங்கி சம்பாதித்த ஒருவரை பிரிட்டன் பொலிசார் கைது செய்துள்ளனர். 68வயதுடைய நடராஜா என்பவர் இலங்கைத் தமிழர்கள் சுமார் 700பேருக்கு பணத்தை வட்டிக்குக் கொடுத்துள்ளார். அத்தோடு அவர் பணத்துக்குப் பதிலாக நகைகளை வாங்கியுள்ளதோடு அறா வட்டியும் வாங்கியுள்ளார். பிரித்தானிய சட்டப்படி வட்டிக்கு பணம் கொடுப்பது சட்ட விரோத செயலாகும். 2003ஆம் ஆண்டு முதல் இவர் இவ்வாறாக வட்டிக்கு விட்டு பணம் சம்பாதிப்பதாகவும் சுமார் 1.3 மில்லியன் பிரித்தானிய பவுண்களை இவர் உழைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

தற்போது மட்டும் சுமார் 500,000 ஆயிரம் (அரை மில்லியன்) பிரித்தானிய பவுண்களை அவர் சுமார் 700 பேரிடம் வட்டிக்கு விட்டுள்ளார். அதில் அனைவருமே தமிழர்கள் எனக் கூறப்படுகிறது. இவரை பிரித்தானிய பொலிசார் கைது செய்து நீதிமன்றில் நிறுத்தியுள்ளனர். நடராஜாவிடம் வட்டிக்குப் பணத்தைப் பெற்று வட்டிகட்டியே நொந்துபோன ஒருவர் கொடுத்த முறைப்பாட்டின் பேரிலேயே பிரித்தானியப் பொலிசாரும், சட்டத்துக்குப் புறம்பான பணக் கொடுக்கல் வாங்கல்களை நெறிப்படுத்தும் ஆணைக்குழுவும் சேர்ந்து இவரைக் கைதுசெய்துள்ளது.

## வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள 22 தேர்தல் மாவட்டங்களில் இடம்பெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் 2009 ஆம் ஆண்டு புதிய வாக்காளர் இடாப்பின்படி ஒரு கோடியே 43 இலட்சத்து 15 ஆயிரத்து 417பேர் வாக்களிப்பதற்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

# பூமி அதிர்வை பதிவு செய்யும் உபகரணங்களை இலங்கையில் பொருத்துவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

பூமி அதிர்வை முன்கூட்டியே பதிவுசெய்யும் உபகரணங்கள் இரண்டை இலங்கையில் பொருத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. வடமத்திய மாகாணத்தில் உள்ள மகாந்திரவல மற்றும் தென் மாகாணத்திலுள்ள கக்வன ஆகிய இடங்களிலேயே இந்தப் புதிய உபகரணங்கள் பொருத்தப்படவுள்ளன.

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள இந்த இரண்டு உபகரணங்களும் தலைமையகத்துடன் நேரடித்தொடர்பினை கொண்டிருக்கும் என புவிசரிதவியல் திணைக்களத்தின் தலைவர் N.D விஜயானந்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் பல்லேகல உட்பட மேலும் 3 இடங்களில் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே பதிவுசெய்யும் நிலையங்கள் செயற்படுவதாகவும், இந்நிலையங்கள் ஊடாக இயற்கை அனர்த்தம் பற்றி இலங்கை மக்கள் சிறந்த நிலையில் அறியகூடியதாக உள்ளதாகவும், ஜப்பானில் இடம்பெற்ற பூமி அதிர்வைப் பதினொரு நிமிடங்களில் அறிய முடிந்தது எனவும் இலங்கையை அண்டிய பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்களை ஒருசில நிமிடங்களில் அறிந்து இயன்ற அளவிலான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வங்கிக் கணக்கு இரகசியங்களைத் திருடி பணப்பரிமாற்றம் செய்யும் இணையங்கள்

(கொழும்பு)

இன்டர் நெட் பாங்கிங் என்று சொல்லப்படும் இணையத்தின் ஊடாக வங்கிக் கணக்கைப் பராமரிக்கும் வசதிகளை பல வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. அதனைப் பாவிக்கும் வாடிக்கையாளர்களும் அதிகரித்துள்ளனர். இந்த நிலையில் முன்னணி வங்கிகள் சிலவற்றின் இணையத்தை ஒத்த இணையங்களை



சில மர்ம நபர்கள் அமைத்து அதற்குச் செல்லும் வாடிக்கையாளர்களிடம் இருந்து, கடவுச்சொல் மற்றும் இரகசிய குறியீடு என்பனவற்றைப் பெறுகின்றனர் என்ற முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இந்த மர்ம இணையத்தளத்துச் செல்லும் வாடிக்கையாளர்கள், அது பொய்யான இணையம் எனத் தெரியாமலே தமது வங்கிக் கணக்கு மற்றும் ரகசிய குறியீடுகளை அதில் இடுவதால் அதனைச் சில மர்ம நபர்கள் பெற்று அவர்கள் கணக்குகளை முடக்கி மேலும் அதில் இருந்து இலகுவாகப் பணத்தைப் பரிமாற்றம் செய்து வேறு வங்கிகளில் உள்ள கணக்கில் காசைப் பெற்றுக் கொள்வதாக இணையம் தொடர்பான அவசர உதவிக் குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அறியப்படுகிறது.

இதனை அடுத்து அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையால், சில மர்ம இணையங்கள் முடக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. மின்னஞ்சல் மூலமாகவே பல வாடிக்கையாளர்களுக்கு, தகவல்கள் அனுப்பப்படுவதாகவும்,அதில் உள்ள தொடுப்பை கிளிக் செய்யும் போது அது மர்ம இணையத்தளத்துக்குச் செல்வதாகவும மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# விதவைகள், அனாதைகள் ஓய்வூதியம் சட்டத்தில் வருகின்றது திருத்தம்

(கொழும்பு)

விதவைகள்,அனாதைகள் ஓய்வூதிய சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக ஓய்வூதிய திணைக்களம் தெரிவித்துள்ளது. உயர் செல்வாக்குமிக்கவரும் அரசாங்க உயர்பதவி வகித்தவருமான ஒருவர் இரண்டு ஓய்வூதியங்களைப் பெற்றுக்கொண்டிருந்தமை 2004ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இவ்வறிவிப்பு வெளியாகியுள்ளது.

அதேவேளை,மேற்படி அதிகாரிக்கு உரித்தான ஓய்வூதியத்தை ஓய்வூதிய திணைக்களம் உடனடியாக நிறுத்தியது. இவர் நேர்மையில்லாத முறையில் பெற்ற இரண்டாவது ஓய்வூதியம் 1,519,274 ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவருக்கு வழங்கப்பட்ட இந்த மிகை ஓய்வூதியத்தை மீளப் பெறும் வகையில் இவருக்கு உரித்தான ஓய்வூதியத்தின் 50 சதவீதத்தை மாதாந்தம் அறவிட ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் திலகரத்ன நடவடிக்கை எடுத்தார்.

இதனை எதிர்த்து மேற்படி முன்னாள் அரசாங்க அதிகாரி மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இதனை எதிர்த்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கு கடந்த 2008ஆம் ஆண்டு மார்ச் மாதம் தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்நிலையிலேயே விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய சட்டத்தை தாம் இறுக்கமாக்கவுள்ளதாகவும், அதன் மூலமே ஏமாற்றுக்காரர்களுக்கு உரிய தண்டனைய்ய வழங்க முடியும் எனவும் திலகரத்ன மேலும் கூறினார்.

## விசேட அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் களில் போது வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவென,விசேட அதிகாரிகள் நியமிக்கப்படவுள்ளதாக உதவித்தேர்தல் ஆணையாளர் சுமணசிறி தெரிவித்தார்.

வாக்களிப்பு நிலையங்களில் சுமார் மூவாயிரம் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இவர்களுக்கான விசேட பயிற்சிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இறுதித் தேர்தல் முடிவு வெளிவரும் வரையும் இவர்கள் பணியில் இருப்பார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய நிர்வாக சபை தெரிவு

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட மகாசங்க சம்மேளனத்தில் புதிய நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் என்.சர்வானந்தம் தலைவராகவும், திருமதி ஜெயமதி யோகேஸ் செயலாளராகவும், சிவயோகன் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் 7 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (104)

## பொதுக்கூட்டம்

(ஆனைக்கோட்டை)

வலிதென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் 5ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு அனைத்து ஓய வூதியர்களையும் கலந்து கொளளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு மதுபான நிலையங்களுக்கு பூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு வாக்களிக்கும் பகுதிகளிலுள்ள சகல மதுபானநிலையங்களும் மூடப்பட வேண்டுமென மதுவரித்திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் தினத்தன்று மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளனவா என்பதனை மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கண்காணிப்பர். அவ்வாறு சட்டத்தை மீறிய வகையில் எவராவது செயற்பட்டு,மதுபான நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டால் அவர்கள் நீதிமன்றின் முன் நிறுத்தப்படுவார்களெனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# பொதுமக்களுக்கு தரமான சேவை; சேவைக்கட்டணங்களிலும் மாற்றம்

## யாழ்.மாநகரசபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை தனது சேவைகள் தொடர்பாகவும் அவற்றுக்காக அறவிடப்படும், கட்டணங்கள் தொடர்பாகவும் மீள் பரிசீலனை செய்து புதிய கட்டண அறவீட்டு நடைமுறை ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து யாழ். மாநகர முதல்வர் வெளியிட்டிருக்கும் செய்திக் குறிப்பை இங்கு தருகிறோம்.

யாழ்ப்பாணம் மாநகரசபையானது கடந்த கால யுத்த சூழ்நிலையினால் எவ்வித வருமான அதிகரிப்பையும் மேற்கொள்ளாது கிடைக்கப்பெற்ற வருமானத்தைக் கொண்டே தனது சேவையை வழங்கி வந்திருக்கின்றது. தற்போது மாநகரசபையினால் மக்களுக்கான சேவைகள் மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் அதிகமாக முன்னெடுக்கப்பட்டு வருவதனால், ஏற்கனவே நீண்ட காலத்திற்கு முன்னர் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையிலிருந்த கட்டணங்களைப் பின்வருமாறு நியாயமான விதத்தில் 01.01.2011 ஆம் திகதி தொடக்கம் அதிகரித்து அறவிடுவதெனக் கடந்த 31.01.2011ஆம் திகதிய மாதாந்தப் பொதுக் கூட்டம் மற்றும் வாடகை மற்றும் விளம்பரக் கட்டண அதிகரிப்பினை மீளாய்வு செய்வதற்கான 23.02.2011ஆம் திகதிய கலந்துரையாடல் என்பவற்றில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும், அதன் விபரம் பின்வருமாறு அமையும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### விண்ணப்பப் படிவங்கள்

| | | |
|---|---|---|
| 1. ஆதனவரிப் பெயர்மாற்ற விண்ணப்பப் படிவம் | - | ரூ 250.00 |
| 2. கட்டட விண்ணப்பப் படிவம் | - | ரூ 750.00 |
| 3. காணி உபபிரிகை விண்ணப்பப் படிவம் | - | ரூ 750.00 |

### விண்ணப்பங்கள்

| | | |
|---|---|---|
| 1. உடமைச் சான்றிதழ் | - | ரூ 750.00 |
| 2. சுவீகரிக்கப்படாமைக்கான சான்றிதழ் | - | ரூ 750.00 |
| 3. ஆதனப் பதிவேட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி பெறுதல் | - | ரூ 100.00 |
| 4. ஆதனவரி பெயர்மாற்றம் பரிசீலனை | - | ரூ 750.00 |

### விளம்பரங்களும், வாடகைகளும்

| | | |
|---|---|---|
| 01. விளம்பரங்கள் ஒரு சதுர அடிக்கு | - | ரூ 100.00 |
| 02. சபைக்குரிய காணியாயின் நிலவாடகை ஒரு சதுர அடிக்கு | - | ரூ 200.00 |
| 03. தனியார் காணிகளுக்கு நிலவாடகை அறவீடு இல்லை | | |
| 04. நகர மத்தியில் மக்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு விளம்பரத்தின் அதிகூடியதான அளவு | | 20அடி* 10 அடி |
| 05. நாவலர் கலாசார மண்டபம் வாடகை நாளொன்றிற்கு | - | ரூ 5000.00 |
| 06. பொதுசன நூலகக் கேட்போர் கூடம் வாடகை நாளொன்றிற்கு | - | ரூ 20000.00 |
| 07. பதாதகைகள் ஒரு சதுர அடிக்கு (இதற்கான காலவரையறை 02 வாரங்களாகும்) | - | ரூ 50.00 |
| 08. பொது நீர்க்கம்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு நாளாந்தம் | - | ரூ 2.00 |
| 09. பொதுசன நூலகத்தினைப் பார்வையிடுவதற்கான கட்டணம் | - | ரூ 10.00 |
| 10. சுப்பிரமணியம் பூங்கா பிரவேசக் கட்டணம் | | |
| (அ) சிறுவர்களுக்கு | - | ரூ 10.00 |
| (ஆ) வளர்ந்தோருக்கு | - | ரூ 25.00 |
| 11. பவுசர் மூலமாக விநியோகிக்கப்படும் குடிநீருக்கான கட்டணம் | - | ரூ 1250.00 |
| 12. வாகன நிறுத்தல் கட்டணம் நாளொன்றிற்கு (அ) கார் | - | ரூ 50.00 |
| (ஆ) வான் | - | ரூ 100.00 |
| (இ) லொறி | - | ரூ 200.00 |
| (ஈ) பஸ் வண்டி | - | ரூ 250.00 |
| (உ) மினி பஸ் | - | ரூ 100.00 |
| (ஊ) கனரக வாகனம் | - | ரூ 300.00 |

13. சபையின் கடைகளுக்கான வாடகை
விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகையில் அதிகரித்த அளவின்

- 40% இற்குச் சமனான அளவு மட்டும் அதிகரிக்கப்பட்டு 2011ஆம் ஆண்டிலும்,
- 60% இற்குச் சமனான அளவு மட்டும் அதிகரிக்கப்பட்டு 2012ஆம் ஆண்டிலும்,
- 100% இற்குச் சமனான அளவு அதிகரிக்கப்பட்டு 2013ஆம் ஆண்டிலிருந்தும் அறவிடப்படும்.

மாநகரசபையின் அனைத்துச் சேவைகளையும் பூரணமாகப் பெற்றுக்கொள்வதற்காக மேற்படி அதிகரித்த கட்டணங்களைச் செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு யாழ்.மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

# மறவன்புலோ சகலகலாவல்லி பாடசாலையின் தேவைகள் விரைவாக நிறைவேற்றப்படும்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



இந்த வித்தியாலயத்தின் தேவைகள் விரைவில் எனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் மூலம் நிறைவேற்றித்தரப்படும் என ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) அவர்கள் நேற்று யாழ்.மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களது எதிர்பார்ப்புக்களுடன் அவர்களது வாழ்வு வளம் பெற எம்மாலான அனைத்து உதவிகளை செய்யத் தயாராகவுள்ளோம். இன்று இந்தப் பாடசாலை மட்டுமல்ல, இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வீடுகளும் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இப்பாடசாலையின் தேவைகள் குறித்து அதிபர் எனக்கு தெரியப்படுத்தியுள்ளார். அதனை வருகின்ற ஆண்டிற்கான எனது பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து நிறைவேற்றித் தருவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான இணைப்பாளர் தோமஸ் லிச்சர் மற்றும் அந்நாட்டின் பிரதிநிதிகள், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் சாள்ஸ், உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# திருட்டு முயற்சி முறியடிப்பு; பண்ணாகத்தில் பரபரப்பு

(பண்ணாகம்)

பண்ணாகத்தில் பட்டப்பகலில் நடைபெற்ற திருட்டு முயற்சி ஒன்றை ஊர்மக்கள் திரண்டு முறியடித்துள்ளனர்.

நேற்று மாலை 4 மணியளவில் பண்ணாகத்தில் உள்ள சிவஞானம் சிவபாலன் என்பவரது வீட்டினுள் கூரையைப் பிரித்து உள்நுழைந்த திருடன் அங்கிருந்த இலத்திரனியல் சாதனங்களைத் திருடியுள்ளான்.

அச்சமயம் அந்த வீட்டு உரிமையாளர்கள் கூக்குரலிட்டுள்ளனர். அப்போது திருடன் தப்பியோட முயற்சித்தபோது ஊர் மக்கள் திரண்டு திருடனைத் துரத்திப்பிடித்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட திருடனும் இத்திருட்டுக்கு உதவியதாக சந்தேகிக்கப்படும் மேலும் இருவரும் பிடிக்கப்பட்டு வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## எமக்கு விடுதலை...

அனுப்பி வைத்துள்ளனர்.

நீதியான தீர்வெதுவும் இல்லாத நிலையில் சிறைச்சாலைகளில் பல ஆண்டு காலமாக விடுவிக்கப்படாமல் இருக்கும் எங்களை விடுதலை செய்வதற்கு அல்லது பிணை வழங்குவதற்கு நடவடிக்கை எடுங்கள். எங்களின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. எங்களின் பிள்ளைகளினது எதிர்காலத்தை யாவது சீரழியாமல் பாதுகாருங்கள் என வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டி ருக்கிறது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாம் கடந்த மூன்று தசாப்தங்களாக சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். கடந்த காலங்களில் எமது விடுதலை தொடர்பாக பலர் வழங்கிய வாக்குறுதிகளில் எதுவுமே இது வரை நிறைவேற்றப்படவில்லை.

எங்களில் அனேகமானோர் திருமணமாகியவர்கள். பலவிதமான தொழில் துறைகளில் ஈடுபட்டு வந்தவர்கள். குறிப்பாக நாம் எதுவித முடிவுகளும் இல்லாமல் நீதியான தீர்வுகள் எதுவும் எட்டப்படாமல் எதற்காக எம்மை நீண்ட காலமாய் தடுத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியாமல் சிறை வாழ்க்கை அனுபவித்து வருகின்றோம்.

குறிப்பாக எமது வழக்குகளுக்கு ஒரு சட்டத்தரணியைக் கூட அமர்த்துவதற்கு முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம்.

எமது குடும்ப நிலை மிக மோசமாகவும் பிள்ளைகளின் கல்வி நிலை சீரழிந்தும் இருக்கின்றது. தற்போதைய சூழ்நிலையில் நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நீதிமன்றச் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதனைவிட கடந்த காலத்தில் இருந்த யுத்த சூழ்நிலை முற்றிலும் நீங்கியுள்ளது.

எனவே எமது விடயத்தைக் கவனத்தில் எடுத்து எம்மை விடுதலை செய்யுங்கள் அல்லது பிணையில் செல்வதற்கு அனுமதியுங்கள்.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் பிணை வழங்குவதற்கான விசேட ஏற்பாடொன்றைச் செய்து தாருங்கள்.

இலங்கையில் உள்ள சகல சிறைச்சாலைகளிலும் 600 இற்கும் மேற்பட்ட அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாய் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

மேலும், நீங்கள் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற அடிப்படையில் தயவு கூர்ந்து மேலுள்ள எமது கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து கட்டாயம் நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையோடு தங்களுக்கு இக்கடிதத்தை அனுப்பி வைக்கிறோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## சிங்கப்பூருக்கான...

காட்டி இச் செய்திகள் குறிப்பிடுகின்றன. தேசிய ஐக்கிய முன்னணியின் முன்னாள் தலைவி பேரியல் அஷ்ரப் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட்ட போதிலும், அத்தேர்தலில் அவர் தோல்வியடைந்திருந்தார். அதேவேளை, இலங்கை கடற்படையின் முன்னாள் தளபதி வசந்த கரணகொட ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அமைச்சர் தேவானந்தாவுக்கு.....

தொழில்நுட்ப சபையின் விஞ்ஞானியான கலாநிதி கொஸ்சுவாமி அவர்கள் ஏற்கனவே இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் தற்சமயம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட உள்ளதுமான வாழைநார் ஊடான உற்பத்தி தொடர்பாக விளக்கமளித்ததுடன் வாழைக் குலையினை அறுவடை செய்தபின்னர் வாழை மரத்தினை ஆக்கப்பொருளாக்கும் திட்டத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா காட்டும் அக்கறையினைப் பெரிதும் பாராட்டினார். அத்துடன் வாழைநாரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட உற்பத்திப் பொருட்களையும் இம்மாநாட்டில் பங்குகொண்ட செய்தியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்குக் காண்பித்தார். குறிப்பாக கைவினைப் பொருட்களைப் பார்வையிட்டோர் பெரிதும் வியப்படைந்தனர்.

அதனையடுத்து விசேட உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் வழிகாட்டலுடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டமானது மக்களுக்கு மேலதிக வருமானத்தை தரக்கூடியது. இயற்கை அழவுகளினால் வாழை மரத்திற்கு ஏற்படும் அழிவுகளை ஈடுசெய்யக்கூடியது. கழிவுகள் இல்லாது சுற்றுச்சூழலை பேணக்கூடியது என்பதுடன், இரசாயனக் கலப்பின்றி மனித வாழ்விற்கு ஒத்துப்போகும் வகையில் நாடுபூராகவும் மேற்கொள்ளப்படக் கூடியது என்ற வகையில் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்தது எனத்தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவு வழங்குகின்றது. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் உதவி வழங்குகின்றது. இந்நிலையில் ஜனாதிபதியின் வழிகாட்டலுடன் விரைவில் நாடு முழுவதும் வாழைநார் உற்பத்தித் திட்டம் முன்னெடுக்கப்படும் எனத்தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி மாநாட்டில் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திசாநாயக்கா, அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர்- டக்ளஸ்கே, இந்திய விஞ்ஞான தொழில்நுட்ப சபையின் விஞ்ஞானிகளான கலாநிதி கொஸ்சுவாமி, கலாநிதி கலிற்றா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் உதயசிறி காரியவசம் உட்பட அமைச்சின் கீழ்வரும் நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## விரிவுரையாளர்கள்....

சிரேஷ்ட பேராசிரியர்களுக்கு ஆகக் கூடுதலான சம்பளமாக 168,000 ரூபாய் தருவதென்று அரசாங்கத் தரப்பினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும், அவை வழங்கப்படவில்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பதாக 2008ஆம் ஆண்டு அரசாங்கம் வாக்குறுதியளித்திருந்தது. பின்னர் இடைக்கால கொடுப்பனவாக 25 வீத சம்பள அதிகரிப்பு கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வழங்கப்படுமென்று அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியிருந்தார்.

2011ஆம் ஆண்டு வரவு, செலவுத் திட்டத்தில் 100,000 சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரையில் எந்தவித சம்பள அதிகரிப்பும் வழங்கப்படவில்லை.

# நியாயமான முறையில் நடத்த முத்தரப்பினரதும் ஆதரவு அவசியம்

**- பொலிஸ்மா அதிபர் மஹிந்தபாலசூரிய**



(கொழும்பு)

எதிர் வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத்தேர்தலை நியாயமான முறையில் எந்தவித மோசடிகளும் நிகழா வண்ணம் நடத்துவதற்கு முத்தரப்பினரதும் ஆதரவு அவசியம்என பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய கோரியுள்ளார்.

பொதுமக்கள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல்கள் இடம் பெறும் பிரதேசங்களில் உள்ள அரசியல்வாதிகளினதும் ஒத்துழைப்பு பொலிஸாருக்கு அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவரேனும் குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் செயற்படுவார்களாயின் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும், பொது ஆலோசகர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் சுதந்திரமான வகையில் வாக்குகளைப் பயன்படுத்துவதற்கு தேவையான பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுததுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.இதேவேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தி கொள்ளத் தக்கதாக அமையவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்தை முன்வைத்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எமது செய்தியாளர் பொலிஸ் மாஅதிபரிடம் வினவியபோது, அதற்கு பதிலளித்த அவர், குறித்த குற்றச்சாட்டு ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளரின் தனிப்பட்ட கருத்து எனக் குறிப்பிட்டார்.

பொலிஸார் தமது சிரமத்தையும், பொருட்செலவையும் பாராது, பணியாற்றியுள்ளமை புள்ளிவிபரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவிற்கு அமைய சட்ட விரோதமான அனைத்துத் தேர்தல் பிரசாரங்களும் அகற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், கிராம மட்டத்தில் சிறு சிறு பிரதேசங்களில் இருக்கின்ற சுவரொட்டிகளை துல்லியமாக அகற்றுவது கடினம் எனவும் பொலிஸ் மாஅதிபர் மஹிந்தபாலசூரிய தெரிவித்துள்ளார்.

**– ஜப்பானில் ஏற்பட்ட திடீர் அனர்த்தங்களால் –**

## இலங்கையர் பெரும்பாலானோர் தாயகம் திரும்ப விருப்பம்

அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட நில அதிர்வு , ஆழிப்பேரலைகள் மற்றும் அணுஉலைவெடிப்பு போன்ற சம்பவங்களினால் அங்கிருக்கும் பல இலங்கையர்கள் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்

இந்த நிலையில் இலங்கை திரும்ப விரும்பும் இலங்கையர்கள் குறித்த விபரப்பட்டியல் ஒன்றை திரட்ட, ஜப்பானில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட விருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த நடவடிக்கை பூர்த்தியானதும், அங்குள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வர உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

ஜப்பானில் ஏற்பட்ட திடீர் அனர்த்தங்களால், அங்குள்ள இலங்கையர்கள் சிலர் சிறிய காயங்களுக்கு உட்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஜப்பான் அணு உலை.....

என்பதை அறிவதற்காக இன்று முதல் வான்பரப்பை காண்காணிக்கப்போவதாகவும் தெரிவித்துள்ளது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இக்காண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என இலங்கை அணுசக்தி முகவரகத்தின் தலைவர் கலாநிதி விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

### இந்திய மீனவர்களின்....

முதலாவது கோரிக்கையாக- இலங்கையின் ஆட்புல எல்லைக் குட்பட்ட வடபகுதியில் மன்னார் குடா பாக்குநீரினை, பாக்கு விரிகுடாப் பகுதியில் இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி நுழைந்து இலங்கை அரசாங்கத்தினால் தடைவிதிக்கப்பட்ட இழுவை மிதிகள் மற்றும் தங்கூசி வலைகளைக் கொண்டு மீன் பிடித்தலைத் தடுத்த நிறுத்த வேண்டும். இரண்டாவது கோரிக்கையாக- அத்துமீறி நுழைந்து எமது பிரதேசங்களில் மீன்பிடியில் ஈடுபடுவதனால் எமது கடல்வளம் அழிவடைந்து, மீனவர்கள் பாதிக் கப்படுவதனை தடுத்து நிறுத்த வேண்டும். மூன்றாவது கோரிக்கையாக- வடபகுதியில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 30,000 குடும்பங்களைச் சேர்ந்த 1,25,000 மீனவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் பாதிப்புக்குள்ளாகும் எம் மீனவர்களுக்கு நஷ்டஈடு வழங்க இந்திய-இலங்கை அரசுகள் ஆவன செய்யவேண்டும்.

நான்காவது கோரிக்கையாக-இப் பிரச்சினை சம்பந்தமான சுமூகத் தீர்வை எட்ட சட்டபூர்வமான பேச்சுக்களில் இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் ஈடுபட இலங்கை, இந்திய அரசுகள் ஏற்பாடு செய்ய வேண்டும். ஐந்தாவது கோரிக்கையாக- இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறிய செயற்பாட்டால் எமது மீனவர்கள் முற்றாகத் தொழிலை இழந்து தமது அன்றாட வருமானத்தை இழக்கும் நிலைமையைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

ஆறாவது கோரிக்கையாக- 2003 ஆம் ஆண்டிலிருந்து இந்திய, இலங்கை மீனவர் பிரச்சினைகளைச் சுமூகமாகத் தீர்ப்பதற்கு முக்கிய பங்காற்றிய தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பினை இரு நாட்டுப் பேச்சு வார்த்தைகளிலும் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் தமது கோரிக்கைகளினை முன்வைத்தனர். (மி, 70)

### அணு உலைப் பயங்கரம்...

இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட அழிவுகளை விட அதிகமான துயரத்தை ஜப்பான் தற்போது சந்தித்துள்ளது. நிலநடுக்கம் மற்றும் சுனாமி ஆழிப்பேரலை போன்ற இயற்கை அனர்த்தங்களின் தாக்குதலில் இருந்து மீளும் முன்பே, அந் நாட்டின் அணு உலைகள் மூலம் அடுத்த பேராபத்து நேர்ந்துள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட புகுஷிமா டாயிச்சி அணுசக்தி நிலையத்தின் மூன்று அணு உலைகள் அடுத்தடுத்து வெடித்துள்ளன. இந்த மூன்று அணு உலைகளிலிருந்தும் வெளியேறும் ஹைட்ரஜன் ஜப்பானின் ஒரு பகுதியை முழுமையாக ஆக்கிரமித்துள்ளதுடன், அணு உலையின் துகள்கள் காற்றில் வேகமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முதலில் அணு உலையிலிருந்து 20 கிலோ மீற்றர் தூரம் வரை குடியிருந்த மக்களை வெளியேறச் சொன்ன ஜப்பானிய அரசாங்கம், இப்போது 40 கிலோ மீற்றர் வரையுள்ள பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி வருகிறது. இதுவரை 11 இலட்சம் மக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு புகலிடம் தேடிப் புறப்பட்டுள்ளனர்.

டோக்கியோ வரை அணுக்கதிர் வீச்சு உணரப்பட்டுள்ளதாகவும், உடல் நலத்தைப் பாதிக்கும் அளவுக்கு இக் கதிர்வீச்சின் அளவு அபாய கட்டத்தை நெருங்கி உள்ளதாகவும் ஜப்பானின் அரசாங்கத்தின் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. அணுக்கதிர் வீச்சிலிருந்து தற்காலிகமாகப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகளும் மக்களுக்கு அறிவிக்கப்பட்ட வண்ணம் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### கச்சதீவுக்கு...

காலை 4.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை கச்சதீவுக்குப் பயணம் மேற்கொள்ள முடிவதுடன், 19ஆம் திகதி இரவு கச்சதீவில் தங்கியிருந்து திருவிழாவில் பங்குபற்றவும் முடியும்.

மேலும் யாத்திரிகர்கள் செல்வதற்காக குருநகர், குறிக்காட்டுவான், நெடுந்தீவு, மண்கும்பான் ஆகிய துறைகள் ஊடாகப் படகுகளில் கச்சதீவுக்குப் பயணம் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. வெளிநாட்டு யாத்திரிகர்கள், குருமார்கள், பாதுகாப்பு அமைச்சிடம் இருந்து அனுமதி பெற்று ஓமந்தை ஊடாகக் கச்சதீவுக்குப் பயணம் மேற்கொள்ள முடியும்.

மற்றும் குடிநீர் மலசல கூட வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்திய யாத்திரிகர்கள் தேவை கருதி பணப்பரிமாற்றலுக்காக இலங்கை வங்கியின் கிளையொன்றும் கச்சதீவில் இயங்கவுள்ளது. அவசர தேவை கருதி பயன்படுத்துவதற்காக Humedica நிறுவனத்தின் அம்புலன்ஸ் படகுச் சேவையும் இடம்பெறும். மேலும் யாத்திரிகர்கள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களைத் தம்முடன் எடுத்து வருதல் தவிர்க்கப்பட வேண்டுமெனவும் கண்டிப்பாக கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# யாழ். கிளி. மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அரச பாடசாலைகளுக்கு பூட்டு




(கொழும்பு)

எதிர்வரும் 17ஆம் திகதி நாட்டில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளி நொச்சி மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலும் உள்ள அரச பாடசாலைகளுக்கும் இன்று முதல் 17ஆம்,18ஆம், திகதி களில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சகல மாகாண மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் விசேட சுற்று நிருபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கல்வியமைச்சின் செயலாளரால், உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங் கப்படும் விதம் குறித்து வெளியிடப்பட்ட அறிக்கை ரத்து செய்யப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆலயத்தில் பூசகரின் சடலம்; வரணி - இயற்றாலையில் பரபரப்பு

வரணி-இயற்றாலைப் பகுதியிலுள்ள ஆலயமொன்றில் நேற்று முன்தினம் பிற்பகல் வேளையில் பூசை நடத்தச் சென்ற பூசகர் ஒருவர் ஆலயத்தினுள்ளே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

பூசை நடத்தச் சென்றவரைக் காணவில்லை என உறவினர்களினால் தேடப்பட்டபோது, ஆலயச் சூழலில் அவரது மோட்டார் சைக்கிள் நிற்பதைக் கண்ட அயலவர்கள் பூசகரைக் காணவில்லையென ஆலயக் கதவின் தூவாரத்தினூடாகப் பார்த்தபோது தூங்கில் தொங்கிய நிலையில் இறந்து காணப்பட்டதைப் பார்த்த உறவினர்கள் கதவை உடைத்துப் பார்த்ததாகத் தெரிவிக்கப்படு கிறது. அப்போது வேட்டியினால் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதில் சாவகச்சேரி வடக்கு மீசாலையைச் சேர்ந்த குணாநாதசர்மா கரிகரசர்மா (வயது -23) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். உறவினர்களினால் கொடிகாமம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறும், விசாரணை முடிந்ததும் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறும் அவர் உத்தரவிட்டார். (11)

## மாணவர்களுக்கு மதிய உணவு தடைப்பட்டுப்போனது ஏன்?

பாடசாலைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவிற்கான உலர்உணவு விநியோகப் பொருட்களின் கையிருப்பு தீர்ந்ததன் காரணமாக உரிய காலத்தில் பாடசாலைகளுக்கு வழங்கமுடியாமல் உள்ளதாக யாழ். செயலக உலகஉணவுத்திட்டப்பகுதியினர் தெரிவித்துள்ளனர். இதற்கான பொருட்கள் வந்து சேர்ந்ததும் அவை உடனடியாக பாடசாலைகளுக்கு விநி யோகிக்கப்படவுள்ள தாகவும் அவர்களால் தெரி விக்கப்பட்டது. யாழ். மாவட்ட பாடசாலைகளின் முதலாம் தவணையின் மாசிமாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டிருந்த போதும், பங்குனிமாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் இதுவரை பாடசாலைகளுக்கு சம்பந்தப்பட்ட பகுதியினரினால் விநியோகிக்கப் படவில்லை. இதன்காரணமாக பாடசாலைகளில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவருகின்ற மதிய உணவு நிறுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. இதனால் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழுகின்ற கிராமப்புற பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதாக மேலும் தெரியவருகின்றது. (பா)

### தேர்தலுக்கு இடையூறு...

எச்சரித்துள்ளார். அவர் இவ்விடயம் குறித்து தொடர்ந்து கூறுகையில், வாக் களிப்பு நிலையம் ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்குள்ள தேர்தல் அதிகாரிகளை விரட்டியடித்தல், காலை 7 மணிக்கு வாக்களிப்பை ஆரம்பிக்க முடியாமற் செய்தல், மாலை 4 மணிக்கு வாக்களிப்பை முடிவுக்கு கொண்டு வரமுடியாமற் செய்தல், வாக்காளர்களை அச் சுறுத்துதல் ஆகியவை நியாயமான தேர்தலை நடத்த இடமளிக் கப்பாத நடவடிக் கைகளாக கணிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: பலவந்தமாகப் போடப்படும் வாக்குகளை நீக்கிவிட்டு வாக்குகளை எண்ண நடவ டிக்கை எடுக்கப்படவுள்ள போதிலும், வாக்குப் பெட்டிகளை வாக்கு எண்ணும் நிலையங்க ளுக்கு எடுத்துச் செல்ல முடியாமற் போகுமிடத்து அப் பிரதேசத்துக்கான வாக்குகள் செல்லுபடியற்ற தாக்கப்படும். அவ்வாறான ஒரு வாக்காளிப்பு நிலையத்தில் மீண்டும் வாக்களிப்பு நடத்தப்பட்டு அதன் பின்னரே குறிப்பிட்ட உள்ளூராட்சி மன்றத்தின் தேர்தல் முடிவு வெளியிடப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மரண அறிவித்தல்



**குணநாதசர்மா கரிகரசர்மா**

குணநாதசர்மா கரிகரசர்மா அவர்கள் 14.03.2011 திங்கள் காலமானார். அன்னார் குணநாதசர்மா கமலபூபதி தம்பதிகளின் அன்பு மகனும், கஜேந்திர சர்மா, கஜானத்தன், கஜாளினி, கௌசிகா, கம்ஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும்ஆவார் அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.03.2011 புதன் (இன்று) சாவகச்சேரி வடக்கு மீசாலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.


**சாவகச்சேரி வடக்கு மீசாலை.** (110) **தகவல் கு.குணநாதசர்மா**

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


**11) சிங்களச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

1. மே மகே பொத்த
2. மே அபே பந்திய
3. பொகோம ஸ்துதிய
4. பொனாவ

**12) பின்வரும் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய சரியான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) 
உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு எத்தனை கட்டங்கள்?

2) 1. இவ்வுருவினை முடித்துப் பெறும் திண்ம உரு யாது?



3) அண்ணாவின் கீழ்ப் பாதத்தின் நீளம் 9 cm ஆகும். தம்பியின் கீழ்ப் பாதத்தின் நீளம் அண்ணாவின் பாதத்தின் நீளத்தைவிட 2 cm குறைவாகும். 63 cm நீளமுள்ள பலகையைத் தமது பாதங்களால் அடிமேல் அடிவைத்து அளப்பதில் அண்ணனும் தம்பியும் ஈடுபட்டனர்.

1. அண்ணன் வைத்த காலடிகள் எத்தனை?
2. அண்ணனைவிட தம்பி கூடுதலாக எத்தனை காலடிகள் வைத்திருப்பார்?

4) ஒருவர் ரூ.500 தாள் ஒன்றைக் கொடுத்து 8.50 பெறுமதியுடைய 50 கொப்பிகளை வாங்கினார் எனின் அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

5) வியாபாரி ஒருவர் 7 ரூபா வீதம் 250 முட்டைகளை வாங்கினார். பறவைக் காய்ச்சல் பற்றிய பீதி ஊரில் பரவியதால் அவருக்கு ரூபா 6.50 வீதமே விற்க முடிந்தது எனின், வியாபாரிக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு?

6) ரூபா 500 எத்தனை 20 ரூபாத் தாள்களைக் கொண்டுள்ளது?

**13)** பறவையொன்று மரத்தில் கூடுகட்டி முட்டையிட்டது. முட்டையிலிருந்து குஞ்சுகள் பொரித்தன. வளர்ந்ததும் பறக்கப் பழகின. ஆனால் ஒன்று மட்டும் சோம்பலினால் பறக்கப் பழகவில்லை. ஒருநாள் மரநாய் ஒன்று மரத்தில் ஏறியது எனும் சம்பவத்தைத் தொடர்ந்து சரியான எழுவாய், பயனிலையுடன் ஆறு வசனங்களை எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

**எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் வினாத்தாள்களைப் பெற்று பயன்பெறும் மாணவர்களுக்கு அரசால் நடத்தப்படும் பரீட்சையில் முன்னணியில் உள்ள மாணவர்கள் கல்விமுரசு வாராந்தப் பயிற்சிபெற்ற வினாத்தாள்களை உறுதிப்படுத்தின் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும்.**



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2011

பகுதி - II

1மணி 15 நிமிடம்

# கல்வி முரசு

வெளியீடு 05



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ் தரப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

பச்சைப் பசேலென செழித்து வளர்ந்த நெற்பயிர்களுக்கு இடையே ஓடிய வரம்புகளில், தமது தோளில் கலப்பைகளுடன் உழவர் வீறுநடைபோட்டுச் சென்றனர். உழவரின் கம்பீர நடையைக் கண்டுகளிக்க, உதயசூரியன் தன் ஒளிக்கதிர்களைப் பரப்பிக்கொண்டு, வான் முகட்டில் இருந்து மெல்லமெல்ல எட்டிப் பார்த்தான். வரம்புகளில் இருந்த தவளைகள் நீரினுள் தத்திப் பாய்ந்தன. இதனால் நீரில் அலைகள் வட்டமாகப் பரவின. வயலின் அருகே சலசலவென வாய்க்காலில் ஓடும் நீருக்குப் போட்டியாக நித்திரை விட்டெழுந்த குருவிகள் கீச் கீச் எனக்கத்தியபடி கூட்டமாக வந்து இறங்கின. அவை தமது சிறிய அலகினால் நெல் மணிகளைக் கொத்த ஆரம்பித்தன. இந்த ஆரவாரங்களால் பயிரில் இருந்து பறக்கும் பூச்சிகளைக் கொக்குகள் தமது அலகினால் பற்றி விழுங்கின.

1. கலப்பை என்பதற்கு ஒத்த சொல் தருக.

..............................................................................................................

2. வரம்புகளில் என்பதை ஒருமையில் எழுதுக.

..............................................................................................................

3. நீரில் அலைகள் உண்டாகியதற்கான காரணம் யாது?

..............................................................................................................

4. உழவன் என்பதன் எதிர்ப்பாற்சொல்லினை எழுதுக.

..............................................................................................................

5. பந்தியிலே இருந்து தெரிந்தெடுத்து பின்வருவனவற்றிக்கு ஒவ்வொரு உதாரணம் தருக?
   1. இரட்டைக் கிழவி :..............................................
   2. அடுக்கு மொழி :..............................................
   3. இணை மொழி :..............................................
   4. வினை எச்சம் ::..............................................

6. ‘ஆரவாரம்’ என்பதற்கு எதிர்ச்சொல்லினை எழுதுக.

..............................................................................................................

7. இறந்தகால உயர்திணை வினைமுற்று ஒன்று எழுதுக.

..............................................................................................................

8. பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொல்லைப் பந்தியில் இருந்து எடுத்து எழுதுக.
   1. சொண்டு :.............................. 2. காலைக் கதிரவன் :..............................

9. பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.
   1. சிறிய :.............................. 2. செழித்து :..............................

10. “விழுங்கின” என்பதை நிகழ்காலத்தில் எழுதுக.

..............................................................................................................

**02) தரப்பட்ட சொற்களைப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்து வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**
**(ஒளிந்தது, நகரத்தில், ஒழித்தது, கரை, ஒளித்தது, அரிவாள், ஒழிந்தது, கறை, நரகத்தில், அறிவாள்)**

1. கண்டி ..............................தலதா மாளிகை இருக்கின்றது.
2. காயத்தில் இருந்து பாய்ந்த குருதியின்..............................உடையில் படிந்தது.

3. முயலின் கெட்டித்தனத்தால் சிங்கத்தின் தொல்லை.........................................................................

4. மகாவலி கங்கையின.........................................................................ஓரமாக, உயரமான மூங்கில்களைக் காணலாம்.

5. முற்றிய நெற்கதிரை.........................................................................கொண்டு வெட்டினர்.

**03) சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

1. வீதியின் / பக்கத்தால் / நாம் / வலது / செல்லவேண்டும் / நடந்து

.........................................................................................................................

2. உடலில் / பூச்சியின் / வண்ணத்துப் / இரண்டுசோடி / உண்டு / இறக்கைகள்

.........................................................................................................................

**04) ஒரு கடையில் ஐந்து நாட்களில் விற்பனை செய்யப்பட்ட தொப்பிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.**

| நாள் | தொப்பிகளின் எண்ணிக்கை |
|---|---|
| திங்கள் | 12 |
| செவ்வாய் | 06 |
| புதன் | 07 |
| வியாழன் | 13 |
| வெள்ளி | 16 |

இந்த அட்டவணையில் இருந்து பெறக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய இரண்டு வாக்கியங்கள் எழுதுக.

1

2.

**05) கீழே தரப்பட்ட விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

| | |
|---|---|
| 1 மாதுளம்பழம் | 35.00 |
| 1 அன்னாசிப் பழம் | 25.00 |
| 1 தோடம்பழம் | 13.00 |
| 1 வாழைப்பழம் | 3.00 |
| 1 அப்பிள் | 15.00 |
| 1 கொய்யாப்பழம் | 4.25 |

1) மாதுளம்பழம் ஒன்றையும் கொய்யாப்பழம் இரண்டையும் வாங்க கடைக்காரனிடம் ரூபா 100 ஐக் கொடுத்தால் மீதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு? ......................ரூபா..........................சதம்

2) மூன்று அன்னாசிப் பழங்களும் மூன்று தோடம்பழங்களும் வாங்க வேண்டுமானால் எவ்வளவு பணம் தேவை?

......................ரூபா..........................சதம்

3. கண்ணனிடம் ரூபா 20 இருக்கிறது. அவன் கடையில் ஏதாவது இரண்டு பழங்களைத் தெரிவு செய்ய வேண்டும். அப்பழங்கள் எவை?

.........................................................................................................................

4. இருநூறு ரூபா தாள் காசை கடைக்காரனிடம் கொடுத்து இரண்டு தோடம்பழங்களும் மூன்று வாழைப்பழங்களும் வாங்கினால் மிகுதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

.........................................................................................................................

5. விலைப்பட்டியலில் குறிப்பிட்ட எல்லாப் பழங்களிலும் ஒவ்வொன்று வீதம் வாங்க விரும்பும் ஒருவர் எவ்வளவு பணத்தைச் செலுத்த வேண்டும்?


.........................................................................................................................

**06) பின்வரும் அடைப்புக்குள் சில தாவரங்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.**

சாத்தாவாரி, இஞ்சி, மிளகு, கறிவேப்பிலை, எலுமிச்சை, வேம்பு, கோரை, ஆவரசு

இவற்றில் ஒவ்வொரு உருவிற்கும் பொருத்தமான பெயரைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.






1)................................ 2)................................ 3)................................ 4)................................





**07) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இரவு நேரத்தில் பூக்கும் பூக்கள் வாசனை அதிகமாக இருப்பதற்கான காரணம்?
   1. சூரிய ஒளி கிடைக்காமையால் 2. வண்டுகளைக் கவருவதற்கு 3. காற்றுவீசுவதனால்
2. உலர்ந்த நிலையில் பயன்படுத்தக் கூடிய பழவகைகளில் ஒன்று
   1. கொடி முந்திரிகை 2. மரமுந்திரிகை 3. வாழைப்பழம் 4. மாம்பழம்
3. தர்மசக்கரம், சிலுவை, பிறை, சூலம் என்பன சின்னங்களாக அமைந்திருக்கும் மதங்களின் வரிசை முறையே.
   1. இந்துமதம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் 2. பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம், இந்துசமயம்
   3. பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம், இந்துசமயம் 4. பௌத்தம், இந்துசமயம், இஸ்லாம், கிறிஸ்தவம்
4. காற்றினால் பரவும் வித்தைக் கொண்ட தாவரம்.
   1. தென்னை 2. இலவம் பஞ்சு 3. மாங்காய் 4. பனங்காய்
5. விவசாயிகளுக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளில் ஒன்று.
   1. வண்ணத்துப் பூச்சி 2. தேனீ 3. வெட்டுக்கிளி 4. தும்பி
6. தீ விபத்து ஒன்று ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் அல்லாதது.
   1. வாயு அடுப்பில் வாயு வெளியேற்றம் 2. மின் ஒழுக்கு
   3. பலத்த இடிமின்னல 4. தண்ணீர்ப் பஞ்சம்
7. மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணம் செய்வோர் பாதுகாப்பிற்காக அணிந்து கொள்ள வேண்டியது யாது?
   1. கண்ணாடி 2. தலைக்கவசம் 3. சப்பாத்து 4. கையுறை
8. ஆதிக்குடிகள் காணப்பட்டமையால் இரத்தினபுரிப் பகுதிக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?
   1. வெத்தாகல் 2. றுஹுணு 3. சப்ரகமுவ 4. பாகியன்கல
9. "உண்ண உணவு தந்திடும்..." எனும் அருவிவெட்டுப் பாடலைப் பாடியவர்.
   1. கவிஞர் வாகரைவாணர் 2. அழ.வள்ளியப்பா
   3. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை 4. எம்.எச்.எம்.ஹலீம்தீன்
10. ஆக்கப்பாடத்தின்போது மாதிரித் தோணி செய்வதற்கு உகந்தது.
    1. பலகை 2. கடதாசி 3. களிமண் 4. தென்னோலை

**08) ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**

1) Hands up
2) Happy Birthday
3) Blue
4) Friday
5) Post office

**09) தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.**

1. மஞ்சள் நிறம்
2. உஙகளுடைய பெயா எனன :.........................................................................
3. உங்களுக்கு நன்றி
4. உங்கள் ஆசிரியர் எங்கே

**10) தமிழ்ச் சொற்களுக்குரிய சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1. வணக்கம் :.................................................. 2. சூரியன் :..................................................
3. பூக்கள் :.................................................. 4. மஞ்சள் :..................................................
5. கட்டில் :..................................................